விளம்பர விகிதங்களுக்கு :
மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்
பெரியதெரு,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுதுக.

# சத்தியவேத பாதுகாவலன்

சந்தா விபரம்
•
வருடசந்தா
இலங்கை ரூபா 5-50
வெளிநாடுகள் „ 6-50

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.
1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
Telephone : No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 22-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 37-ம் இலக்கம்

# அருளப்ப பாப்பரசரும் என்னைப்போல ....

ஐக்கியஅமெரிக்கதேசத்திலே ஹாம்ரன்நகர் அர்ச். பத்திரிசியார் கோவிலின் உதவிக்குரவரான வண. பற்றிக் கோட்ரன்சுவாமியாரே தமதுமைந்தரைப் பங்குக்குரவராக உலகில்கொண்டுள்ள ஒரேயொரு உதவிக்குரவராக விளங்குகின்ருர். ஒருபெரியகுடும்பத்தைப் பிறப்பித்தபிறகு இவர் குருமடத்தில் சேரலாயினர். சீவந்தராயுள்ள இவருடைய பன்னிருபிள்ளைகளில் இருவர் குருமாராயிருக்கின்றனர். இவர்களில்ஒருவர்தான் இவரை உதவிக்குரவராகக் கொண்டுள்ள அர்ச். பத்திரிசியார்கோவில் பங்குக்குரவரான வண. குளோட் கோட்ரன்சுவாமியார். இவரின் புதல்விகளில்இருவர் கன்னியாஸ்திரிமாராய் இருந்துவருகின்றனர். எஞ்சியுள்ள புதல்வர்களும், புதல்விகளுமான எட்டுப்பிள்ளைகள் மூலமும் இதுவரை இவர் 23 பேரப்பிள்ளைகளையும் 2 பீட்டப்பிள்ளைகளையும் கண்டிருக்கின்ருர்.

ஓர்காலம் வர்த்தகத்துறையில் வெற்றிகரமாக ஈடுபட்டிருந்த வண. பற்றிக் கோட்ரன்சுவாமியார் 1947-ம்ஆண்டு தமதுமனைவியார் காலஞ்சென்றபின் ஒரு குருவாகவரத் தீர்மானித்தார். அப்போது இவருக்குவயது 65. தமது கல்லூரிப்படிப்புகளைலோருங்கல் லூரியில்முடித்த பின்னர் ரோமாபுரிசென்று பிற்பட்டவயதிலே குருப்பட்டத்துக்குரிய அழைத்தலைக் கொண்டுள்ளவர்களுக்கென அங்கேயிருந்துவருகின்ற பிடாகுருமடத்தில் வேதசாஸ்திரம்கற்று 1952-ம்ஆண்டு தமது70-ம்வயதில் குருப்பட்டம்பெற்று ஐக்கிய அமெரிக்கதேசஞ்சென்று அங்கே டபூக்அதிமேற்றிராசனத்தில் திருத்தொண்டாற்றத்தொடங்கினர். அங்குஇவர் மேர்ஸிஆஸ்பத்திரியின் விசாரணைக்குரவராய் இருந்தபோது ஆபத்தானநோய்கண்டு அவஸ்தைபூசுதலும் பெற்றுக்கொண்டார். அதனால் இவர் உலகில் ஏழுதேவதிரவியானுமானங்களையும் பெற்றுள்ள ஒரு சிலகத்தோலிக்கரில் ஒருவராய் இன்று அறியப்படுகின்ருர்.

சென்றஆவணிமாதமே இவர் தமதுகுருமைந்தனின்கீழ் உதவிக்குரவராக நியமனஞ்செய்யப்பெற்ருர். இவர் அவ்விசாரணைப் பங்கிலே முதியவர்களான பங்குக்கிறீஸ்தவர்கள் மத்தியில் தொண்டாற்றியும், திருமணஞ்செய்துகொண்ட தம்பதிகளுக்கு ஆலோசனைகூறியும் வருகின்ருர். "தங்களைப்போலும் முதிர்ந்த வயதுடைய ஒருமனிதருக்குக் குருத்துவஅழைத்தல் கிடைத்தது பெரியஆச்சரியமாய் இருக்கிறதே யென்று தற்சமையம் 78 வயசுடையவரான சுவாமியாரைக் கேட்டால் "அருளப்பபாப்பரசரும் என்னைப்போல அதேவயதுடையவராய்த்தானே இருக்கிருரென்றுசொல்லிச் சமாளித்துவிடுகின்ருர்.

## சுரங்கஅறைகளில் கண்டெடுத்த புராதன சித்திரங்கள்

ரோமாபுரியிலே ஏழுகோவில்களின் வீதியிலுள்ள கொம்மோடில்லாச் சுரங்கஅறைகளுள்ள பகுதியில் புதைபொருள் ஆராய்ச்சியாளரால் புதிய ஏற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட ஒருதொகையான புராதனசித்திரங்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. நான்காம் நூற்ருண்டின் இறுதியிலே ரோமாபுரியின் கிறீஸ்தவசமூகத்துக்குக் கொம்மோடில்லாஎன்ற ரோமைச்சீமாட்டியால் நன்கொடையாகவழங்கப்பெற்ற காணியில்அமைந்திருந்த ஒருசேமக்காலைக்குச்சொந்தமான சிறியகல்லறைக்குரிய நில்வறைஒன்றில் இவைகள் கண்டெடுக்கப்படலாயின. இந்தச்சித்திரங்களில் ஒன்று, சிறியதோர்மலையின் மீது ஒருமாடப்புருவைக் காண்பிக்கின்றது. அம்மலையிலிருந்து நான்குஆறுகள் பிரிந்துசெல்லுகின்றன. அந்தமாடப்புருவை மற்றும்பன்னிரண்டு மாடப்புருக்கள் சூழ்ந்திருக்கின்றன. மலைமீதுள்ள அந்தமாடப்புரு நமது திவ்வியஇரட்சகரேயென்று கிறிஸ்ரியன் என்ற புதைபொருளாராய்ச்சிச் சஞ்சிகை தெரிவிக்கின்றது. மலைஎன்பது ஏதேன் நந்தாவனமாகும். நான்குஆறுகளும் வேதாகமத்தில் எடுத்துக்கூறப்படும் பிஷோன், ஜிஹோன், திகிறிஸ், யூபிறற்றிஸ் நான்குமாகும். பன்னிருமாடப்புருக்களும் பன்னிருஅப்போஸ்தலர்களைக் குறிப்பனவாகும்.

## ஒற்றைக்கையரான மனந்திரும்பும் பாதிரியார்

ஓர்அங்கிளிக்கன்சபைப் பாதிரியாரான கனம். சாள்ஸ் பெஞ்சமின் வாக்கர்அவர்கள் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்துகொள்ள எண்ணுகிருரெனச் "சன்டே எக்ஸ்பிறெஸ்" எனும் பத்திரிகையிலே செய்திவெளியாயிருக்கிறது. இவர் மூன்றுவயதுடையவராய் இருந்தபோது ஏற்பட்ட ஒருவிபத்தில் தமது வலது கரத்தை இழந்துபோயினர். "எனது வலது கரத்தை இழந்துபோனமையானது குருப்பட்டத்துக்கு என்னைக் கண்டிப்பாகத் தடுக்கின்றது; ஆனல், சில சந்தர்ப்பங்களிலே ஒரு குருவாகவர அனுமதிக்கக்கூடிய விசேஷஇளக்காரம் எனக்கு அருளப்படலாம்" என்று இவர் தெரிவித்ததாக அறிவிக்கப்படுகிறது. இந்தவிதமான அங்கவீனமானது குருத்துவத்துக்கு ஒரு தடையாக இருக்கமாட்டாதென்றும், யுத்தங்காரணமாக அங்கவீனரானவர்களுக்கு அநேகசந்தர்ப்பங்களிலே திருச்சபை விசேஷஇளக்காரம் காண்பித்திருக்கிறதென்றும் பொதுவாக நம்பப்படுகிறது.

## நெதர்லாந்தும், சமய ஸ்தாபன பாடசாலைகளும்

இப்போது நெதர்லான்ட்ஸ் என அறியப்படுகின்ற ஒல்லாந்து தேசத்திலுள்ள ஆரம்பபாடசாலைகளில் ஏறக்குறைய 37சதவிகிதமானவைகள் இன்றுகத்தோலிக்க பாடசாலைகளாய் இருக்கின்றன. இவைகள் அரசாங்கபொதுப் பாடசாலைகளைப்போலவும், மற்றும்சமயஸ்தாபன பாடசாலைகளைப் போலவும் அரசாங்கத்தின் பூரணஆதரவைப்பெற்றுவருகின்றன. அத்தேசத்திலுள்ள 2,777 கத்தோலிக்க ஆரம்பபாடசாலைகளிலே 17,969 ஆசிரியர்களால் 6,46,281மாணவர்கள்கல்விபயிற்றப்படுகின்ருர்கள். உலாந்த அரசாங்கம் பொதுப்பாடசாலைகளையும், சமய ஸ்தாபன பாடசாலைகளையும் சமமாகவே நடத்துகின்றது. அரசாங்கம் சமயஸ்தாபனபாடசாலைகளைப் பூரணமாக ஆதரிக்கிறதென்னுமிடத்து, அதுவே கட்டட, தாபரிப்புச் செலவுகளையும், ஆசிரியர்களின் வேதனங்களையும் உதவுகின்றது. அத்தேசத்தில் எதிர்காலஆசிரியர்களைப் பயிற்றுவனவாய் இன்று 44கத்தோலிக்க ஆசிரியகலாசாலைகள் இருந்துவருகின்றன. இவற்றிலே 7,983மாணவர்கள் பயிர்சிபெறுகின்ருர்கள். அரசாங்கமே இவற்றின் பரீட்சைகளை நடத்திவருகின்றது.

# திருக்கல்லறைக்கோவில்

கத்தோலிக்கர், ஆர்மீனியர், கிரேக்கபிரிவினைச்சபையினரின் பிரதிநிதிகள் ஜெருசலேம்நகரிலே மூன்றுதினங்களாக ஒருமகாநாடு கூடித் திவ்வியஇரட்சகரின் திருக்கல்லறைக்கோவிலில் ஆவசியகம் பழுதுபார்க்கப்படவேண்டியவைகளைச் செய்துமுடிப்பதில் ஒரு உடன்பாட்டுக்கு வந்திருக்கிருர்கள். அதன்படி பழுதுபார்க்கும் வேலை மூன்றுகட்டங்களாகச் செய்துமுடிக்கப்படும். முதலாவதாகப் பிரவேசவாயில்பகுதியும், இரண்டாவதாக உட்புறத்திலுள்ள கிரேக்கபிரிவினைச்சபைச் சிற்ருலயமும், மூன்ருவதாகத் திருக்கல்லறையும் பழுதுபார்க்கப்படும். இதற்குஏற்படும். செலவுமதிப்பு ஆறுலட்சம்பவுண். இது அங்குள்ள லத்தீனிய, கிரேக்க, ஆர்மீனியபத்திறியாக்குமாரால் சமமாகப் பகிர்ந்துஉதவப்படும்.

## பிரித்தானிய குத்துமல்வீரர் மனந்திரும்பினுர்

பிரித்தானிய பளுவான நிறைக்குத்து மல் சம்பியனுன திரு. ஹென்றி கூப்பர்அவர்கள் மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்திருக்கின்ருர். ஆறுமாதகாலம் இவருக்கு வேதசத்தியங்களைப் படிப்பித்தபின் இவரைத் திருச்சபையில் சேர்த்துக்கொண்டவரும், பலொட்ரின் சபைக்குருமாரின் மாகாணசிரேஷ்டருமான வண. ஜேம்ஸ் மேதர்சுவாமியவர்கள் இவருடையமனந்திரும்புதல்பற்றிப் பேசியபோது: "திரு. கூப்பர் அவர்கள் சிலகாலமாகக் கத்தோலிக்கசமயத்தின்மட்டிலே ஆழ்ந்த மதிப்புக் [illegible] பாராட்டத்தகுந் [illegible] வேதசத்தியங்களைத் தொடர்ந்து படித்தார்" எனக் கூறியிருக்கின்ருர். இந்தக்குத்துமல்சம்பி[illegible]ரான திரு. ஜிம் [illegible]களும் ஒருகத்தோலிக்கராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே நேரத்தில் ஓர் அறையில் பல வகுப்புகள்

ஒரேவகுப்பறை. அங்கு பலபாடங்கள் ஒரேநேரத்தில் நடக்கின்றன. ஒரு மூலையில் லத்தீன்வகுப்பு. இன்னொரு மூலையில் ஜேர்மன் மொழிப் பயிற்சி. அதே அறையில் வேரோர் இடத்தில் பெரியபிள்ளைகள்சிலர் பதிவு செய்யப்பெற்ற பிரான்ஸிய மொழி விரிவுரை ஒன்றைக்கேட்டுப் பிரான்ஸிய மொழி ஒலிப்பைப் பயில்கின்றனர்.

இந்தமாதிரியான கல்விமுறை அமெரிக்க பாடசாலைகள் சிலவற்றில் கையாளப்படுகிறது. மாணவரின் தேவைக்கு ஏற்பப் பாடத்திட்டத்தை அமைப்பதே இதன் கொள்கை. இதனைச்சேர்ந்த கேட்ஸ்கில் பிராந்தியத்திட்டத்தின் கீழ் நியூயோக் மாவட்டத்திலுள்ள 27 பொதுப்பாடசாலைகள், நாட்டுப்புறத்துச் சில உயர்நிலைப் பள்ளிகள் கல்வியைப் பலவகைப்படுத்தவும், கல்வித்தரத்தை உயர்த்தவும் புதுவழிகள் கண்டுபிடித்துக்கொண்டிருக்கின்றன.

ஆரம்ப பாடசாலைகள் பலவற்றில் பலன் விளைவித்துள்ள இத்திட்டம் ஓர்ஆசிரியரைக்கொண்ட பல வகுப்புகளைப் பரீட்சைசெய்து பார்க்கிறது. ஒரேவகுப்பறை, அதில் ஒரேநேரத்தில் பலவகுப்புகள், இவற்றை மேற்பார்வையிடும் ஆசிரியர் ஒருவரே. ஒரே ஆசிரியர் ஒவ்வொரு வகுப்புக்கும் போய்ப் பொதுவாகச் சொல்லவேண்டியவற்றைச் சொல்லுகிறார். தனித்தனியே கவனிக்கவேண்டிய மாணவரைக் கவனிக்கிறார்.

பிலிம்களையும், ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாடாக்களையும், ஒலித்தட்டுகளையும் வாங்கி வகுப்பறைகளில் பயன்படுத்துகிறார்கள். ஆசிரியர்களுக்குப் பதிலாக இவற்றைப் பயன்படுத்தவில்லையென்றும், ஆசிரியர் தனது கற்பிக்கும் திறமையைப் பயன்படுத்த அவருக்கு அதிகநேரம் கிடைக்கவே இவைகள் துணைச்செய்கின்றனவென்றும் பாடசாலை அதிகாரிகள் சொல்லுகிறார்கள்.

இம்முறைப்படி கற்பிப்பதில் கணிதம், அந்நியமொழிகள், வாணிபக் கல்வி, விஞ்ஞானம் ஆகியவற்றில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதென்று பாடசாலை அதிகாரிகள் அறிவிக்கிறார்கள்.

இம்முறைப்படி கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள் முன்னதாகப் பாடத்திட்டங்களைக் கருத்தாய் அமைக்கவேண்டும். கற்பிக்கும் பலவகைக் கருவிகளை அவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

மொழிகள் பல பயின்றுள்ள ஆசிரியர் ஒருவகுப்பில் பெரும்பாலும் லத்தீன் கற்றுக்கொண்டிருக்கலாம். அதே சமயத்தில் அதேவகுப்பறையில் இன்னோரிடத்தில் ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் பதிவுசெய்துள்ள ஒலித்தட்டைக் கேட்டுக்கொண்டிருக்கும் மாணவர்களையும் அவர் மேற்பார்வையிடலாம்.

ஆசிரியர் மிகத்திறமை வாய்ந்தவராக இருந்தால் இம்முறை வெற்றிகாணும் என்பது பாடசாலை அதிகாரிகளின் கருத்து.

பாடத்திட்டத்தை விரிவுபடுத்த வேறு ஒருமுறையும் பரீட்சார்த்தமாகக் கையாளப்படுகிறது. அது கடிதப் போக்குவாத்து முறையாகும். ஒரு பாடசாலையில் கற்பிக்கப்படாத பாடத்தை ஒருமாணவனோ, சிலமாணவரோ கற்கவிரும்பினால், தபால்மூலம் கற்பிக்கப்படும்பாடங்களை வாங்கிப் பயன்படுத்தப் பாடசாலை அதிகாரிகள் ஏற்பாடு செய்கிறார்கள். ஆனால், அந்தப் பாடத்திட்டங்கள் மாவட்டக் கல்விக்கழகம் ஒப்புக்கொண்டவையாக இருக்கவேண்டும்.

வேறு பல பரீட்சார்த்த திட்டங்களும் அமெரிக்க பாடசாலைகளில் உள்ளன. அவற்றுள்ஒன்று, திறமைமிக்க மாணவர் உயர்நிலைப் பாடசாலைகளிலேயே கல்லூரிஅனுபவம் பெறச்செய்வது. கேட்ஸ்கில் திட்டம் நடைபெறும் பிராந்தியத்தில் வாரந்தோறும் விஞ்ஞானம், கணிதம், பண்பியல் கலைகள் ஆகியவற்றில் ஆராய்ச்சி அரங்குகள் நடக்கின்றன.

# கத்தோலிக்க ஆசிரியரின் வேண்டுகோள்

## பாடசாலைகளை அரசாங்கம் எடுக்குமுன் கல்வி நிபுணர்குழு நியமிக்கவேண்டும்

கடந்த 8-9-60 வியாழக்கிழமை பிற்பகல் 4-30மணிக்குக் கொழும்புத்துறை, அர்ச். சூசையப்பர் ஆசிரிய கலாசாலைப் பழையமாணவர்சங்க விசேடபொதுக்கூட்டத்தில், "அரசாங்கம் உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடத்துவதற்குமுன் பல இன, மத கல்விநிபுணர்களைக்கொண்ட ஒருசபையைநியமித்து இவ்விடயம் ஆராயப்படவேண்டும்" என்னும் பிரேரணையைத் திரு. பி. அருளானந்தம் அவர்கள் பிரேரேபிக்க, பண்டிதர் க. யோ. ஆசிநாதன் அவர்கள் அனுவதிக்க, சபையோரால் ஏகமனதாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்பிரேரணை கௌரவ பிரதமமந்திரிக்கும், கல்விமந்திரிக்கும் தந்திமூலம் அனுப்பி வைக்கப்படவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவுமுதலாம இடங்களிலிருந்தும் வந்துகூடிய 400பேருக்குமேற்பட்ட ஆசிரியர்களுட்பட 850பேருக்குமேற்பட்ட பழையமாணவர் கூடியஇக்கூட்டத்துக்குத் திரு. அ. ஞானப்பிரகாசம் அவர்கள்தலைமைதாங்கினர்.

தலைவரவர்களின் தலைமைப்பேருரையில், கத்தோலிக்கபிள்ளைகள் கத்தோலிக்கசமய சூழ்நிலையில் கல்விகற்பதால் மாத்திரம் சமயஅறிவையும், சமய ஒழுக்கத்தையும், சமயஅனுட்டானங்களையும் சரிவரப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும், பிள்ளைகள் தூய்மையுடன் வாழ்வதற்குக் கத்தோலிக்கபாடசாலைகள் அவசியமென்றும், மதப்பற்றே தேசியப்பற்றுடன் வாழ்வதற்கு உறுதுணையாக அமைந்திருப்பதால் பாடசாலைகளை அரசாங்கம்பொறுப்பேற்பது புத்தியான காரியமல்லவென்பதை அறிஞர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார். அதன்பின் உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளை அரசாங்கம்பொறுப்பேற்பதினால் கத்தோலிக்கபிள்ளைகளும், அவர்களதுபெற்றோரும் தமதுஅடிப்படை உரிமைகளைத்தானும் பெறமுடியாது தடுக்கப்படுவார்கள் என்பதைவிளக்கித் திருவாளர்கள் பி. அருளானந்தம், க. யோ. ஆசிநாதன், சோ. கிறிஸ்சோஸ்தோம் ஆகியோர்பலரும் பேசினார்கள்.

— நிருபர்

● பெல்ஜியநாட்டின் படுயின்மன்னருக்குத் திருமண நிச்சயார்த்தம் செய்யப்பட்டிருப்பதாகப் பிரதமர் எம். காஸ்ரன் எஸ்கின்ஸ் சென்ற17-ந்திகதியன்று தெரிவித்திருக்கின்றார். ஸ்பானியதேச இளவரசி [illegible] யோலாவே அவரின் மணப்பெண்ணுவள்.



# பல தேசங்களில்

### மரங்களை உறங்கவைக்கும் மருந்து

ஐக்கியஅமெரிக்கதேச புளோறிடா போன்ற பிரதேசங்களிலே அதிகம் குளிரான பனிக்காற்றுகளால் தோடைகளும், எலுமிச்சைகளும் வாடிவதங்கிப் பழுதடையாமல் பாதுகாப்பதற்காக அம்மரங்களுக்கு "எம்.எச்.–30" என்னும் ஒருபுதிய இரசாயனமருந்து ஊசிமூலம் ஏற்றப்படுகிறது. பனிக்காற்றுகள் உரமாகவீசும் காலங்களிலே இந்தமருந்து அவைகளைத் தற்காலீகமாக 'உறங்க'வைத்துவிடுகிறது. அதாவது இந்தப் புதிய இரசாயன மருந்தின்மூலம் மரங்கள் செயலற்ற நிலைமையில் வைக்கப்படுவதாலே டனிக்காற்றுகள் அவற்றைப் பாதிப்பதில்லையாம். பனிக்காற்றுகள் நீங்கியபின் அவைகள் முன்போல வளர்ந்து நல்ல பழங்களைத் தருகின்றன.

### செயற்கைக் கோள்கள்

விண்வெளி யுகம் தோன்றி மூன்றுண்டுகள் ஆகின்றன. இக்காலத்திலே இதுவரை மொத்தமாக 36செயற்கைக் கோளங்கள் விண்வெளியில் அனுப்பப்பட்டுள்ளன. இவைகள் பூமியை வலம் வருபவைகள். இதுவரை அமெரிக்கா அனுப்பிய செயற்கைக்கோளங்கள் — அதாவது செய்மதிகள்மட்டும் 28. இவற்றில் 15 இன்னமும் விண்வெளியில் வலம்வந்தவண்ணம் இருக்கின்றன. இந்தப் 15 கோள்களில் ஏழு இன்னமும் பூமிக்குத் தகவல்கள் அனுப்பிவருகின்றன. ரூஷியா விண்வெளிக்கு அனுப்பிய செயற்கைக்கோள்கள் 8. இவற்றில் இரண்டுதான் விண்வெளியில் பிரயாணஞ்செய்து வருகின்றன. லூனிக்–1 சூரியனையும், 1960-ம் ஆண்டு வைகாசிமாதம் அனுப்பப்பட்ட முதல் விண்வெளிக்கப்பல் பூமியையும் வலம்வருகின்றன. இரண்டுமே தகவல்எதையும் அனுட்பவில்லை.

### வயிற்றுள் படம்பிடிக்கும் கமரு

வயிற்றினுள் ஏற்படும் புண்களையும், இரணங்களையும், புற்றுநோய்களையும் பிரதிமைப்படம் பிடிக்கக்கூடிய கமரு ஒன்றை ஜப்பானிலுள்ள தொஹோக்கி சர்வகலாசாலைப் பேராசிரியர் எஸ். யமயாட்டா அவர்கள் ஐக்கிய அமெரிக்க தேச மிச்சிக்கன் நகர வைத்தியநிலையச் சர்வகலாசாலைக்கு அன்பளிப்புச் செய்திருக்கின்றார். ஒரு விரல்நுனிஅளவேயுள்ள மிகச்சிறிய இந்தக் கமருவில் வெளிச்சத்தையும், பிலிம்களையும் தானாகவேதரும் நுண்ணிய சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. கமருவுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு நூதனமானகருவியின் உதவியைக் கொண்டு அது இயக்கப்படுகின்றது. நோயாளி கமருவை விழுங்கியதும் இந்த நூதனகருவியினால் அதனை இயக்கி வயிற்றினுள் இருக்கும் புண்களையும், மற்றும் இரணங்களையும் பிரதிமைப்படம் பிடித்தபின் கமரு வெளியே எடுக்கப்படுகின்றது.

* * *

● இந்தியாவிலே நாற்பதினாயிர கோடிரூபா பெறுமதியான தங்கம் ஆபரணங்களாக முடங்கிக்கிடக்கிறது; இத்தங்கம் ஆபரணங்களாகச் சேமித்துவைக்கப் பட்டிருக்கின்றன [illegible] இந்திய ரிசேர்வ்வங்கி மதிப்பிட்டிருக்கின்றதென்று இந்திய அரசாங்க நிதிமந்திரி தெரிவித்திருக்கின்றார்.

### சேதுசமுத்திர திட்டம்

பெரிய கப்பல்கள் போக்குவரத்துச் செய்யக்கூடியதாகப் பாக்குநீரிணையை ஆழமாக்கும் சேதுசமுத்திர திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் சேர்ப்பது குறித்து இந்திய அரசாங்கம் தற்போது ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது. பாக்குநீரிணை ஆழமாக்கப்பட்டுவிட்டால் பெரிய கப்பல்கள் தற்போதுபோல இலங்கையைச் சுற்றிக்கொண்டு செல்லவேண்டியிராது. இதனால் நேரமும், தூரமும் சுருங்கும். இந்தச் சேதுசமுத்திர திட்டம்பற்றி ஆலோசனை கூறுவதற்கென்று ஒரு பிரித்தானிய நிபுணரான கப்ரின் டேவிஸ் சென்ற ஞாயிற்றுக்கிழமை இந்தியாவந்து சேர்ந்திருக்கின்றார். இத்திட்டத்திற்கான உத்தேச செலவாகிய 30 கோடி ரூபாவையும் எவ்விதம் குறைக்கமுடியும் என்பது பற்றியும் இவர் ஆராயவிருக்கின்றார். இத்திட்டத்தால் தூத்துக்குடித்துறைமுகம் பெரிதும் பயனடைவதாயிருக்கும்.

### பெற்ரோலுக்குப்பதில் பழச்சாறு

பெற்ரோலுக்குப் பதில் வடிகட்டிய தோடம்பழச்சாற்றை எரிபொருளாக உபயோகித்துப் பிரித்தானிய கார் ஒன்று ஐக்கிய அமெரிக்கதேச மன்ஹற்றன்நகரிலே கலன் ஒன்றுக்குச் சராசரியாகப் 18 மைல்தூரம் ஓடியிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது. இந்தப் பரீட்சார்த்த ஓட்டத்துக்கு 'ரோவர்' இனத்தைச் சேர்ந்த கார் ஒன்று உபயோகிக்கப்பட்டது. ஓட்டத்தின்போது அதற்குச் சலனசக்தியை உண்டுபண்ணும் இயந்திரமாகிய மோட்டரோ, அன்றேல் உடனடியாகத் தீப்பிடித்துத் தகதகென எரியக்கூடிய விகிதத்திலே நீராவியையும், காற்றையும் கலக்கும்சாதனமாகிய கார்ப்பரேற்றரோ மாற்றியமைக்கப்படவில்லையாம். விதையில்லாத இரண்டாயிரம் தோடம்பழங்களின் சாற்றை வடிகட்டி ஐந்துகலன் எரிபொருள் பெறப்பட்டது. இதனோடு ஈயம் சம்பந்தப்பட்ட ஒரேயொரு கலவைப் பொருள்மட்டும் உபயோகிக்கப்பட்டதாம்.

* * *

● மோல்த்தாதீவின் கொன்ஸி அதிமேற்றிராணியார் இம்மாதத்திலே இற்றைக்கு 1900வருடங்களின்முன் அர்ச். பாவிலுவானவர் சென்றபாதை வழியே யாத்திரிகர்கள் கோஷ்டி ஒன்றை ரோமாபுரிக்கு நடத்திச்செல்லவிருக்கின்றார். யாத்திரிகர்கள் சைறாக்குஸ், றெக்கியோ டி கலாபிறியா, பொஸுவோலி நகர்கள்வழியாக ரோமாபுரி போய்ச்சேர்ந்து பாப்பரசரின் பிரத்தியேகபேட்டி பெறுவார்கள்.

● பாப்பரசருக்காகவும், அவருடைய பிரயாசையால் நடைபெறவிருக்கும் திருச்சபைப் பொதுச்சங்கத்துக்காகவும் புரொட்டஸ்தாந்த கோவில்களிலே பிரசித்தசெபங்கள் செய்யப்படவேண்டுமென்று ஜேர்மனியிலே ஹம்பேக்நகரைச்சேர்ந்த ஒரு லுத்தேர் சபைப் பாதிரியாரான கனம். டக்றர் ஹாம்ஸ் அவர்கள் ஆலோசனைகூறியிருக்கின்றார். இப்பொதுச்சங்கத்தின்மூலம் கிறீஸ்தவஐக்கியத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தூய ஆவியானவரின் உதவியை நாடவேண்டுமென்பதே அவரின்கருத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாலையில் எங்கே போகிறான்?

(முன்தொடர்ச்சி)

பொன்மதிபோன்று சின்னயேசு பொன்னொளிவீசிக்கொண்டுமுன்னடந்து செல்லுகின்றார். பாலியன் பேணாட்டும், ஆபேல்தாத்தாவும் பக்திவிநயத்துடன் அவரைப்பின்தொடர்ந்து செல்கின்றனர். பக்திப்பரவசம் உண்டுபண்ணும் ஒருசிறியஊர்வலமாக இம்மூவரும் எங்குசெல்லுகின்றனர்? எல்லோரும் அறிந்துள்ளவாறு பாலியன் பேணாட் அன்றும்வழமைபோலத் திவ்வியபூசைகாணச் செல்லுகின்றான். ஆனால், தான் எங்குசெல்லுகிறேனென்று அறியாமலே ஆபேல்தாத்தா செல்லுகின்றார். "ஆபேல், இன்று உன்னைச் சந்திக்கவென்றே நான்வந்திருக்கிறேன்" என்று சின்னயேசு சொன்ன மொழிகள்மாத்திரம் அவர் செவிகளில் இன்னமும் தொனித்துக்கொண்டிருக்கின்றன. தன்னைச் சந்திக்கவந்தவர் தன்னை எங்கேஅழைத்துச் செல்லுகிறாரென்ற சிந்தனையில்லாமலே அவரைப்பின்தொடர்ந்து செல்லுகிறார் ஆபேல்.

ஆம், அன்று திவ்வியபூசை காண்பதற்கென்று சின்னயேசு ஓர்இளைஞனையும், ஒருமுதியவரையும் அழைத்துச் செல்லுகின்றார். இல்லை, ஓர்இளைஞனுடன் ஒருமுதியவரையும் ஒன்றுகூட்டிவிடுகின்றார். ஒன்றரைமைல்தூரம்வரை நடைபெற்ற இந்தஊர்வலம் கடைசியாய் ஒருகோவிலைப்போய் அடைகின்றது. அந்தக்கோவிலோ அத்துணை பெரிதன்று. ஆயினும், பெரிதும் அழகுபொலிந்து விளங்கியது. அதன் பலிபீடத்திற்குமேலாகக் குழந்தையேசுவை ஒருகரத்தால் ஏந்தியபடியும், மறுகரத்தால் வாசப் பூங்கொம்பைத் தாங்கியபடியும் அர்ச். சூசைமாதவனின் திருச்சுரூபம் வசீகரமிக்கவனப்புடன் காட்சியளித்துக் கொண்டிருந்தது. அன்று ஒருபுதன்கிழமையாகவே திருநாளில்போன்று அம்மாதவனின் பக்தர்கள் திரளாகச் சமூகமளித் திருந்தார்கள்.

பூசைதொடங்க இன்னும்சிலநிமிஷங்கள் மாத்திரமே இருந்தன. அப்போது மூவரும் கோவிலின் முன்வாசலை அடைந்து படிகளில் அடியெடுத்து வைத்ததும் என்ன அதிசயம்! அவர்களின் முன்னோடியாகவந்த சின்னயேசு மின்னலைப்போன்று கண்ணுக்கு மறைந்துபோகப் பேணாட்டும், ஆபேலும் முன்னும்பின்னுமாகத் தனிமையாய்க் கோவிலுள்பிரவேசித்து அங்குள்ள இருஆசனங்களில் முன்னும் பின்னுமாக அமர்ந்தனர். பூசைஆரம்பமானது. பேணாட் ஒருசம்மனசைப்போன்று கண்ணுங்கருத்துமாய், செபப்புத்தகமும் கையுமாய்ப் பெரும்பய பக்தியுடன் பூசைகண்டுகொண்டிருந்ததைக் கவனித்தபோது, பலவருடகாலம் கோவில்முகம்காணாத—பூசைகண்டறியாத ஆபேல்தாத்தாவுக்குத் தன்னை அறியாமலே ஒருவிதபக்தியருட்சி உள்ளத்தில்பிறந்து, அவரது இளமையில் நிகழ்ந்த பலசம்பவங்களையும் இந்தமுதுமையிலே அவருடையஞாபகத்தில் இழுத்துவந்து விடலாயிற்று.

ஒருபாலியனாய்இருந்தபோது தானும் நாள்தோறும்தனதுபெற்றோருடன்கோவில் சென்றுவந்ததும், அக்காலத்தில் தானும் பேணாட்டைப்போலப் பயபக்தியாகப்பூசைகண்டுவந்ததும், தனதுவீட்டிலே பெற்றோர், சகோதரங்களுடன் மாலைதோறும் மாதாவின்படத்திற்கு முன்பாகத் தினமும்செபமாலைசொல்லிவந்ததும் ஆதியனவெல்லாம் சலனப்படக்காட்சிபோன்று அவர்மனக்கண் முன்பாகக்காட்சியளிக்கத்தொடங்கின. அதனால் அவர்பெரிதும் மனக்குழப்பம் அடைந்தவராய், ஏதேதோவெல்லாம் சிந்தித்தவராய் நீடியசிந்தனையில் ஆழ்ந்தார். இடையிடையே நெடுமூச்செறிந்தார். நெஞ்சில் அறைந்துகொண்டார். அவரின் இருவிழிகளிலிருந்தும் துளிதுளியாகக் கண்ணீர் பெருகிக் கன்னங்கள் இரண்டிலும் வழிந்துகொண்டிருந்தது. இவ்விதம் முற்றாகத்தன்னையேமறந்தவராய்ச்சிந்தனையில் திளைத்திருந்தமையாலே பூசை கண்டும் காணாதவர்போல், அஃதுமுடிந்தும் முடியாததுபோல் அங்குதானே ஆசனத்தில் அமர்ந்தவண்ணமிருந்தார் ஆபேல்தாத்தா.

பேணாட் பூசைமுடிந்ததும் ஆபேலைத் திரும்பிப்பார்த்தான். அவர் ஏதோசிந்தனையில் இருப்பதைக்கவனித்து அவரைக்குழப்ப மனமற்றவனாய்க் காலைப்போசனத்துடன்கூடிய தனதுபுத்தகப்பையையும் எடுத்துக்கொண்டு அவசரம்அவசரமாகப் பாடசாலைசென்றான். பூசைகாண வந்தவர்களிலே சிலபாட்டிகள்தவிர ஏனையோரெல்லாம் தங்கள் தங்கள்வீடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். திவ்வியபூசைநிறைவேற்றிய வண. ஓ'லியறிசுவாமிகளும் குருமனைசென்று காலைப்போசனம்முடித்துச் சிறிதுவேளை ஆறியபின் திரும்பவும் கோவிலுக்குவந்தார். பீடத்தின் பக்கமாக முழந்தாட்படியிட்டுச் செபப்புத்தகத்தைத்திறந்து வாசித்துக்கொண்டிருந்தார் எங்கும் அமைதியான சூழ்நிலை காணப்பட்டது.

அப்போது கோவிலின் மணிக்கோபுரத்திலிருந்த பெரியகடிகாரம் இனியகானம்ஒன்றைப் பாடியபடியே எட்டு மணிஅடித்து ஆபேலின் அயர்தியைக் கலைத்து அவரைத் தட்டியெழுப்பியது. அவரும் அப்போதே துயில்விட்டெழுந்தவரைப்போல் அமைதியாக எழுந்தார். எழுந்து பதமையாகநடந்தார். எங்கே? வெளிவீதிக்கா? அன்றேல் தனதுவீட்டுக்கா? இல்லை. ஆனால், அங்கு தன்னையே எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்போல் செபப்புத்தகமும், கையுமாயிருந்த சுவாமியாரை எதிர்கொண்டு சென்றார். அவரின் காலடிச்சப்தம் கேட்ட சுவாமியாரும் அவரைத்திரும்பிப் பார்த்தார். அப்பால்இருவரும் இரண்டொருசொற்களில் தங்கள்பேச்சை முடித்துக்கொண்டார்கள்.

கால்மணிநேரம் சென்றிருக்கும். அப்போதுகோவிலின் ஒருகோணத்தில் விம்மல்பொருமல் எழுகின்றது. அடிக்கடி யாரோ மூக்குச்சிந்தும் சப்தம் கேட்கின்றது. இந்தச்சப்தம் எங்கிருந்து வருகின்றது. வேறெங்கும் இருந்தல்ல. ஆனால், அங்கிருக்கும் பாவசங்கீர்த்தனத்தொட்டியின்பக்கத்திலிருந்துதான் வருகின்றது. இப்படியெல்லாம் விம்மல்பொருமலுடன் மூக்குச்சிந்துகிறவர் எவராயிருக்கலாம்? வேறெவருமல்ல. நம்முடைய ஆபேல்தாத்தாதான். ஆம், அன்று அந்தப்பாவசங்கீர்த்தனத்தட்டி கண்ணீரால் நனைந்துபோயிருந்தது. இது வெறுங்கண்ணீரல்ல, ஆனால், ஒரு பெரும்பாவியின் மனஸ்தாபக்கண்ணீர். அன்று பெரும்பாவியான மரியமதலேனம்மாள் ஆறாய்ப் பெருகிய தனது மனஸ்தாபக்கண்ணீரால் நமதுஆண்டவரின் திருப்பாதங்களைக் கழுவினாள். இன்றோ ஆபேல்தாத்தா தனதுமனஸ்தாபக்கண்ணீரால் அவருடைய பிரதிநிதியாகிய குருப்பிரசாதியின் பாதங்களைத் தனதுமனஸ்தாபக் கண்ணீரால் கழுவுகின்றார். இவைகள் மனஸ்தாபத்தால் நொறுங்குண்ட இருதயங்கள். ஆம், தொண்ணூற்றொன்பது நீதிமான்களைப்பற்றி உண்டாகிற சந்தோஷத்தைவிட மனந்திரும்பிய இந்தப்பாவியின்நிமித்தம் அன்றுமோட்சத்திலே அதிக சந்தோஷமுண்டாயிருக்கும் அன்றோ!

(தொடரும்)

# தாம் ஓர் கிறீஸ்துவர்தானா?

(முன்தொடர்ச்சி)

"நிசமாகத்தான் சொல்லுகிறேன்; எந்தவிதமானபங்கம் ஏற்பட்டபோதிலும், எனைவிதமான கொடியவாதை வேதனைக்குட்பட்டபோதிலும் கிறீஸ்துவேதத்தை நான் மறுதலிக்கப்போவதேயில்லை" என்று மார்த்தீனாள் காம்பீரமாகச் சாற்றியதைக்கேட்ட படைத்தலைவன் அவளை ஓர்கால்ஏறவிறங்க முறைத்துப் பார்த்துவிட்டு, "பிள்ளாய்! கேடுவரும்பின்னே, மதிகெட்டுவரும் முன்னே; உனக்கு எந்தவிதமும் உயிர்ப்பிச்சைபெற்றுத் தந்துவிடவேண்டுமென்று நானும் தவியாய்த் தவிக்கிறேன்; ஆனமட்டும் முயன்று பார்க்கிறேன்; ஆனால், நீபிடித்தமுயலுக்குக் கால்மூன்றேயென்று அழுங்குப்பிடியாய் நிற்கின்றாய்; இனிமேல் என்னில் குற்றமில்லை; ஆனால் ஒன்று மாத்திரம் சொல்லுகிறேன்; நீ கிறீஸ்துவேதத்தை மறுதலியாதேபோனால் உன்னைச் சிங்கங்களுக்கு இரையாகப் போடும்படி மன்னனகட்டளையிட்டிருக்கிறான்; அப்போதுஉன்கதி யாதாகுமென்பதை இப்போதே நன்றாகச் சிந்தித்துப்பார்; நீ உயிர்பிழைக்க வேண்டுமானால் ஒன்றில் கிறீஸ்துவேதத்தை மறுதலித்துவிடவேண்டும்; அன்றேல் கொடிய சிங்கங்களுக்கு இரையாகவேண்டியதுதான்" என வெட்டொன்று துண்டுஇரண்டு என்றவாறாய் அழுத்தந்திருத்தமாகக் கூறி நின்றான்.

மார்த்தீனாள் இதைக் கேட்டதும் முதல்நாள்இரவு தலைமயனுக்கும், தனக்குமிடையே நிகழ்ந்தசம்பாஷணை நினைவுக்குவந்து, மனதைத் திடப்படுத்திக்கொண்டு, படைத்தலைவனை விழித்து, "கிறீஸ்துவேதத்தை மறுதலியாதகாரணமாகச் சிங்கங்களுக்கு இரையாக எறியப்படுவதையிட்டு நான் கிஞ்சித்தும் கலங்கப்போவதுமில்லை; தாமெண்ணுவதுபோலப் பயந்து நடுங்கப்போவதுமில்லை; ரோமைநகரிலும், வேறிடங்களிலும் எத்தனையோகிறீஸ்தவர்கள் சிங்கங்களுக்கு இரையாகத் தூக்கியெறியப்பட்டுவேதசாட்சிகளாகியிருக்கிறார்கள்என்று நான் அறிந்திருக்கிறேன்; அவர்களில் எத்தனையோபேர் என்போன்ற இளம்பெண்கள்; அவர்கள் அஞ்சிப்பின்வாங்காத சிங்கங்களுக்கு நான்எதற்காக அஞ்சவேண்டும?" என்று இளஞ்சிங்கம்போன்று மொழிந்தாள்.

இவ்விதம் சொல்லக்கேட்ட படைத்தலைவன் தனதுசம்பிரதாயம் மார்த்தீனாளில் பலிக்கமாட்டாதென்பதை நன்குணர்ந்தான். என்றாலும், மனம் பேதலியாது அவளைக் கடைசிமுறையாக ஓர்கைபார்க்கத்தான் வேண்டுமெனக் கருதியவனாய் அவளைப்பார்த்து, "பிள்ளாய், 'கெடுகுடி சொற்கேளாது; கொல்லும்நோய் மருந்தைக் கேளாது' என்றபடிதான் உன்பாடும் இருக்கிறது; 'மூர்க்கனும், முதலையும் கொண்டதுவிடா' என்றவாறான உனது முரட்டுப் பிடிவாதகுணத்தை இனியாவதுவிட்டுவிடு; அருமருந்தன்ன உன் ஆருயிரைக் காத்துக்கொள்ள இன்னும் காலம்பிந்திப்போகவில்லை; சிறுபிள்ளைத்தனமாய்நடந்து உன்சீரியவாழ்க்கையைச் சிதைக்கத்துணியாதே; கொடிய சிங்கங்களுக்கும், அரசனின் சீற்றத்துக்கும் பலியாகநினையாதே; கடைசிமுறையாகச் சொல்லுகிறேன்; கிறீஸ்துவேதத்தை மறுதலித்துவிடு; அரசனின் தயவைப்பெறு; அப்போது நீ உயிர்மீண்டாய்; அன்றேல் மாண்டாய்" என்று நயபயமாக மொழிந்தான்.

படைத்தலைவனின் நயவஞ்சக மொழிகளைக்கேட்ட மார்த்தீனாள் எட்டுணையுமே அவற்றில் எடுபடாதவளாய் அவனைநோக்கி, "நான் சிங்கங்களுக்கோ, அரசனின்சீற்றத்துக்கோ அஞ்சப்போவதுமில்லை; கிறீஸ்துவேதத்தைமறுதலிக்கப்போவதுமில்லை; இதுதான் எனது கடைசிவார்த்தை" என்று அழுத்தமாகமொழிந்தாள்.

அதுவரைநிகழ்ந்த வாக்குவாதத்தையும், மார்த்தீனாள் எதற்கும்விட்டுக்கொடாது அத்துணைஓர்மத்துடன் கூறிய வீரத்துவபதில்களையும் ஆர்வத்துடன் [illegible] அறியாமலே ஆனந்தக்கண்ணீர்பெருக, அன்பு கடலாய்ப்பெருகத் தமது செல்வப்புதல்வியை இன்புடன்விழித்து, "மகளே! இன்றுதான் உனதுவீரத்துவம் கண்டேன்; வீரமொழிகளைக் கேட்டேன்; உனது அருமைத்தந்தைக்கு இதிலும்பெரிய சந்தோஷமுண்டா? ஆம், நீ பாக்கியவதி! இல்லை, நீ சௌபாக்கியவதி! உன்னைப்போலும் ரூபவதிகளான இளங்கன்னியர்கள் எத்தனையோபேர் உனக்குமுன்னதாகவே கிறீஸ்துநாதருக்கும், அவர்திருமறைக்கும் சாட்சிகளாகி — தங்கள்பிராணனைத் தியாகஞ்செய்து வேதசாட்சிகளாகி மோட்சமுடிபுனைந்து இன்றுபரலோகபேரின்பஇராச்சியத்தை அலங்கரிக்கும் கன்னிகாஇரத்தினங்களாக இலங்கிக்கொண்டிருக்கும் அந்தஞானமனோகரகாட்சியை உனதுஞானக்கண்ணால் ஓர்தரம் உற்றுநோக்கிப்பார்! அவர்களுடன் நீயுமசேர்ந்து மற்றோர் இரத்தினமாகத் துலங்கப்போவதை ஊன்றி யோசித்துப்பார்! இதோ! உனக்குக் கிடைக்கப்போகும் வேதசாட்சிமுடியையும், மோட்சமுடியையும் பற்றி எண்ணுந்தோறும் உனதுதந்தை கொள்ளும் பரமானந்தம் பரலோக ஆனந்தமேயெனக்கூறி அப்பால் யாதும்பேச நாவெழாதவராய் நிற்கும்போது படைத்தலைவன் மிகவும் சீற்றங்கொண்டவனாய் "ஐயா! தங்கள் போதனை இம்மட்டும்போதும், போதும்! தமதுபேச்சை இம்மட்டில் நிறுத்தும், நிறுத்தும்! இனிமேல் கணநேரமும் பொறுக்கமாட்டேன்; பெண்ணே! புறப்படு; புறப்படு" என முழங்கினான்.

சிறிதுவேளை எங்கும்நிசப்தமாயிருந்தது. இடிமுழக்கம்போன்று படைத்தலைவன்கூறிய மொழிகளைக் கேட்டு எல்லோரும் திகைத்துநின்றனர். அப்பால் யாதும்பேச வகையறியாதவர்போல் தீயஸ்பிரபு மகளைநோக்கியவண்ணம் கண்ணீர்சொரிந்துநின்றார். அவர் மனைவியோ தனது உதாக்க[illegible]யான மார்த்தீனாள் குரூரசிங்கங்களுக்கு இரை[illegible]ட்டு அடையப்போகும் [illegible]மரணத்தைநினைந்து கண்கள் இரண்டும்கலங்கிக் கண்ணீர்சிந்தி அழுதபோதிலும் தனதுபுதல்வியின் திறம்பாத திடவிசுவாசத்தைக்கண்டு ஆறுதல் அடைந்தவளாய், "என்நேசமகளே! சந்தோஷமாகச் சென்றுவா; உனது போராட்டத்தில் வெற்றிகண்டு வேதசாட்சிமுடி சூடும்படியாகத் தேவவரப்பிரசாசம் உன்மேல்இறங்குவதாக! திவ்வியயேசு உன்னோடிருப்பாராக" என்று அவளை உற்சாகப்படுத்தினாள்.

இந்தப் பரிதாபகாட்சியைப் பார்த்துநின்ற மார்த்தீனாளின் தமையனான சீமோன் தனதுஅருமைத்தங்கைக்குப் பிரியாவிடைகூறும்நேரம் கடைசியாக வந்தபோது அவளுக்கும், தனக்குமிடையே முதல்நாளிரவு நடைபெற்ற

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**புரட்டாசி — 1960**

ஞா. 25 பெந்தக்கோஸ்தின் பின் 16-ம் ஞாயிறு (வி. ம.) [ப]
திங். 26 காலதினம் (அர்ச். சிப்பிரியான் யுஸ்தீனப்பர் ஞா.) [ப]
செ. 27 அர்ச். கொஸ்மாசும் தமியானும் [சி]
புத. 28 அர்ச். வென்செஸ்லாஸ் [சி]
வி. 29 அதிதூதரான அர்ச். மிக்கேலின் ஆலய அபிஷேகம் (வி. ம.) [வெ]
வெ. 30 அர்ச். ஏரோணிமுஸ் (வி. ம.) [வெ]


சத்திய வேத

# பாதுகாவலன்

1960-ம் ஆண்டு
புரட்டாசிமாதம் 22-ந் திகதி


## கருதினல் அகஜியானியன் ஆண்டகை

இம்மாதம் 20-ந்திகதியாகிய கடந்தசெவ்வாய்க்கிழமை இலங்கைக் கத்தோலிக்கமக்கள் அனைவருக்கும் பெரிதும்மனோகரமான ஒருசுபதினமாகும். காரணம், ரோமாபுரியிலே விசுவாசப்பரப்புதல் திருச்சங்கத்தின் தலைவரும், ஆர்மீனியர்களது சிலிஷியாவின் பத்திறியாக்குமாகிய கருதினல் கிறெகொறி பீற்றர் அகஜியானியன் ஆண்டகைஅவர்கள் எமது நாட்டிற்கு முதன்முறையாக விஜயஞ்செய்தமையே. இதற்குமுன் கருதினல் கில்ரோய், கருதினல்கிருஸியாஸ், கருதினல் ஸ்பெல்மன் ஆண்டகைகள் எமது மண்ணில் கால்வைத்திருக்கின்றனர். அவர்களின் விஜயம் இலங்கைக் கத்தோலிக்க மக்களுக்குப் பெரிதும்மனோகரம் விளைத்துள்ளபோதிலும் கருதினல்அகஜியானியன் ஆண்டகையின்விஜயமோ மிகமுக்கியமும், அதிமிகமனோகரம் உண்டுபண்ணுவதுமாகும். ஏனெனில், எக்காலத்திலாவது எமதுநாட்டிற்குவந்த மகாவிசேஷப்பட்ட திருச்சபையின் இளவரசரான தரிசகர் இவரே. விசுவாசப்பரப்புதல் திருச்சங்கதலைவர் என்றமட்டிலே இலங்கைக்கத்தோலிக்கர்உட்பட 3கோடியே 20இலட்சம்பேருக்குமேற்பட்ட கத்தோலிக்கரைத் தமது ஞான ஆதிக்கத்தில் இவர்கொண்டிருக்கின்றார். இவரது ஞானதிகாரத்தைக் கவனிக்குமிடத்து, விசுவாசப்பரப்புதல் திருச்சங்கத்தின் அதிபராயும், ஆர்மீனியகத்தோலிக்கரின் பத்திறியாக்குவாயும், பாப்பரசரது மற்றும் திருச்சங்கங்கள் இரண்டிலும், பாப்பரசரது கம்மிஷன்கள்மூன்றிலும் அங்கத்தவராயும் இருப்பதாலே கருதினல்மார் திருச்சங்கத்திலுள்ள ஏனைய கருதினல்மார்களைப்பார்க்கிலும் அதிகமான கடமைகளை மேற்கொண்டு அதிகம்ஊக்கமாக உழைத்துவருகின்றார். அனைத்துலகையுமே தமது விசாரணைப்பங்காகக்கொண்டுள்ள ஆண்டகை அவர்கள் கடந்தவருடத்தில் ஆசியாவில் ஜப்பான், ஹொங்கோங், வியெற்னம், பிலிப்பைன்ஸ், போர்மோஸா, கோறியா, தாய்லாந்து எனும் நாடுகளிலும், மற்றும்ஆஸ்திரேலியா, நியூசிலாந்திலுமுள்ள மிஷன்களைத் தரிசிப்பதிலே ஒருபெரும்பகுதியைச் செலவிட்டிருக்கின்றார். எமதுநாட்டிலும் இவர் கத்தோலிக்கதிருச்சபையையும், கத்தோலிக்கசமூகத்தையும் தரிசித்துச் செல்வதற்காகவே வரலாயினர். இவர் சென்றசென்ற இடங்களிலெல்லாம் தமதுஇன்சொல்லாலும், அன்பாதரவாலும், அனுதாபசிந்தையாலும், எவரோடும் சாமானிய மனிதரைப்போலப் புழங்கும் இனியகுணத்தாலும் எல்லோரையும் தம்பால் ஈர்ந்து, அவர்களின் ஆத்மீகவாழ்க்கையிலே மிக்கானகரிசனைகொண்டுள்ள ஓர்பொதுப்பிதாவாகத் தம்மைக் காண்பித்திருக்கின்றார். பெரும்பாரமான கடமைகளைக் கொண்டுள்ள தமதுசுற்றுப்பிரயாணத்திலே எமதுநாட்டையும் இவர்சேர்த்துக்கொண்டதற்காக இந்நாட்டிலுள்ள அதிமேற்றிராணியாரும், மேற்றிராணிமாரும், குருமாரும், சந்நியாசர் கன்னியாஸ்திரிமாரும், விசுவாசிகளுமாகிய கத்தோலிக்க சமூகம் முழுவதுமே அவருக்குப் பெரிதும்நன்றி பாராட்ட வேண்டியது என்க.

---

## தேசீய கல்வித்திட்டம்

உதவிப்பணம்பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கக்கூடாதென்னும் பிரேரணைஒன்று கொழும்பிலே சென்றசனிக்கிழமை நடந்தேறிய அகிலஇலங்கைத் தமிழாசிரியர்சங்கத்தின் பதினன்காவது அயனுந்த பொதுக்கூட்டத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியுள்ளது. அதிலே சங்கத்தின் புதிய தலைவர் பேசியவைகள் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கனவாகும். உதவிபெறும்பாடசாலைகளை அரசாங்கம்எடுப்பதால் இந்நாட்டின் கல்வித்தரம் என்னுகுமோ? உண்மைவாழ்க்கைக்கு வழிகாட்டும் சமயகல்வி எவ்வாறு பாதிக்கப்படுமோ? நாட்டிலே காணப்படும் அரசினர்பாடசாலைகளைக் காணும்பொழுதெல்லாம் ஆசிரியர்களின் உள்ளத்திலெழும் உணர்ச்சிகளின்பேருக எழுந்ததுதான் அரசாங்கம்பாடசாலைகளை எடுக்கக்கூடாதென்ற தீர்மானம்; இன்னதென்று இன்னுமேகூறப்படாததும், இன்னுமேஅந்தரங்கமாய்இருந்துவருவதுமான தேசீய கல்வித்திட்டம்என்பது சிறுபான்மைமக்களிடையே அவர்களின் விருப்பத்திற்குமாருகப் பிறிதோர் மொழியைப் புகுத்துவதாய் அமைந்துவிடுமேயென்று நிலவும் அஞ்சத்தகும்நிலைமையையும் நாம் மறந்துவிடமுடியாது என்றெல்லாம் அவர்கூறியவைகள் இந்தவேளை வரவேற்கத் தக்கனவாகும்.

அரசாங்கம்சமயஸ்தாபனபாடசாலைகளை ஏற்றுநடத்துவது ஜனநாயக அரசியல்முறைக்கு மாருனது; அது பெற்ரோரின் அடிப்படை உரிமையைப் பாதிப்பதுமன்றிப் பிள்ளைகளின்கல்வி, நல்லொழுக்கத்திற்கும் இடையூருனது; அதனுல்அரசாங்கம் இந்தநடவடிக்கையைக் கைவிட்டுக் கல்விநிபுணர்களின் ஆலோசனையைக்கேட்டுத்தான் கல்விசம்பந்தமாக — அதாவது இந்தத்தேசிய கல்வித்திட்டம் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்; அரசாங்கம் உதவிபெறும்பாடசாலைகளை எடுப்பதற்குமுன் அதைப்பற்றி ஆராய ஒருகம்மிஷனை நியமனஞ்செய்து, அதன் அபிப்பிராயங்களைப் பொதுமக்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்; அரசாங்கம் உதவிபெறும்பாடசாலைகளை எடுப்பதாலே மதசுதந்திரம் முதலாம் பலசுதந்திரங்களையும் அவைகள் இழந்து–காலகதியிலேதமக்குரிய அந்தஸ்தைஇழந்து வருங்கால பிள்ளைகளின் கல்வித்தரம் பாதிக்கப்படும்நிலை வெகுதூரத்திலில்லை என்றெல்லாம் அறிஞர்கள்பலரும் ஆலோசனை கூறியும் எல்லாம் செவிடன்காதில் சங்காதஞ்செய்தவாருகவே இருக்கிறது. உதவிபெறும் சகலபாடசாலைகளையும் பொறுப்பேற்றபின்னர்தான் நாட்டின்உண்மையான கல்விநிலைமையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படியாய்ப் பிரபல கல்விமான்களையும், கல்விநிபுணர்களையும்கொண்ட கம்மிஷன் ஒன்றை அரசாங்கம் உடனடியாக நியமிக்குமாம். புதியதேசீயக் கல்வித்திட்டத்தைத் தயாரிக்குமுன் இந்தக்கம்மிஷனை நியமிப்பதா? இந்தக்கம்மிஷனின் ஆலோசனையைக்கேட்டுப் புதிய கல்வித்திட்டத்தை உருவாக்கிக்கொண்டு உதவிபெறும்பாடசாலைகளை எடுப்பதா? அன்றேல் பாடசாலைகளைஎடுத்துக்கொண்டு கல்வித்திட்டத்தை உருவாக்குவதா? எதுபொருத்தமானது? எது நீதிமுறையானது?

உளளபடியே நல்லெண்ணத்துடன் தேசீயகல்வித்திட்டம் ஒன்றைப்புகுத்த அரசாங்கம் விரும்பினுல், முந்தஅதைத் தான் நடத்தும் அரசாங்கபாடசாலைகளில் பரிசோதனைசெய்து அது நலமெனக் கண்டபின்னரன்ரோ உதவிபெறும்பாடசாலைகளை எடுப்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். நிற்க,காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகாவின் கொள்கைகளையே தான்சாதிக்கப் போவதாக அவரின்பாரியாரான புதியபிரதமர் சிறிமா கூறுகின்ருர். ஆனுல்,உதவிபெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கவேண்டுமென்பது அவரின் கொள்கையன்று. 1958-ம்ஆண்டு பங்குனிமாதம் பொறளையில் நிகழ்ந்த அனைத்திலங்கைப் புத்தபிக்குகளின் மகாநாட்டில்பிரதமர் பண்டாரநாயகா பேசியபோது: "புத்தசமயத்தின் உரிமைகளைப் பாதுகாக்க நான்முற்படுகையில் மற்றவர்களுக்கு உச்சந்தலையடி கொடுக்கமாட்டேன்; உதவிபெறும்பாடசாலைகளை அரசாங்கம்எடுப்பதைக் கத்தோலிக்கர் மாத்திரமல்ல, புத்தர்களுமே எதிர்க்கின்ருர்கள்" எனக் கூறலாயினர். உதவிபெறும்பாடசாலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளத் தீர்மானித்திருக்கின்ற இந்தவேளையிலே — இதுவிஷயமாய் ஆட்சேபனைகள எழுந்துகொண்டிருக்கிற இத்தருணத்திலே பழங்கணக்கைப்பார்த்து ஒருவர் பட்டோலை விடுத்துக்கொண்டிருக்கிருர். சமயபேதமோ, சாகியபேதமோபாராமல் எந்தப்பாடசாலையும் சேரவரும் பிள்ளைகளையெல்லாம் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற அரசாங்கசட்டத்தை இவர் ஞாபகப்படுத்துவது மிகநன்ருகும். இவருக்குள்ள பழையகிலி இவரைவிட்டு இன்னும் நீங்கவில்லைப் போலும். ஈற்றில்,உதவிபெறும் பாடசாலைகளை எடுப்பதென்று அரசாங்கம்செய்துள்ள தீர்மானத்தைத்தொடர்ந்து அப்பாடசாலைகளில் நிர்வாகம் சீர்குலையத் தொடங்கி, ஆசிரியர்களும் மனச்சோர்வடைந்துள்ளார்களென இப்போதே அறியவரும்போது எதிர்காலநிலைமை யாதாகுமோவென்றுதான் சிந்திக்கின்ரோம்.

---

### புரட்டாசி மாதம்

**பொதுக்கருத்து:—** இக்காலத்திய குழப்பங்களின்மத்தியிலே சகல கத்தோலிக்கரும் ஒருவர் ஒருவரோடும், தங்கள் ஞானமேய்ப்பர்களோடும் ஒற்றுமையுடன் நிலைத்திருக்கும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து:—** சாதிவேற்றுமையானது ஆபிரிக்காவையும், ஆசியாவையும் கிறீஸ்தவ உலகிலிருந்து பிரிக்காதிருக்கக் கிறீஸ்தஅன்பு உதவும்படியாக மன்ருடிக்கொள்வது.

---

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

---

### ஆசிரிய மணிப்பட்டம்

சிலாபம், அர்ச். மரியநாயகி பாடசாலையிலே கடந்தமுப்பது ஆண்டுகளாய்ச் சிறப்பாக ஆசிரியத்தொண்டாற்றிவந்துள்ள சங். பிறதர்செபஸ்தியான் பீரிஸ் அவர்களை அகிலஇலங்கைத் தமிழாசிரியசங்கம் ஆசிரியமணிப்பட்டம்வழங்கிக் கௌரவித்திருக்கின்றது. சென்ற17-ந்திகதி சனிக்கிழமைகாலை கொழும்பு, விவேகானந்தசபை மண்டபத்திலே அச்சங்கத்தின் பதினன்காவதுவருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற்றபோதே பிறதர்அவர்களுக்கு ஆசிரியமணிப்பட்டம்வழங்கிப் பொன்னுடைபோர்த்தப்படலாயிற்று. சங்கதலைவர் திரு. கே. எஸ். இராசேந்திரம் அவர்களே அவருக்குஅப்பட்டத்தை வழங்கிப் பொன்னுடைபோர்த்தினர். அதன்மேல் அவரைப்பாராட்டி வித்துவான் எஸ். எம். ஜே. வேதநாயகம் அவர்கள் பேசியபோது, வடமேல் மாகாணத்திலே தமிழ்ப்பகுதிகள் சிங்களப்பகுதிகளாக மாறிவருகின்ற இச்சந்தர்ப்பத்திலே கடந்தமுப்பது வருடகாலமாகத் தமிழுக்கு அளப்பரிய சேவைசெய்துள்ளவர் சங்.பிறதர் பீரிஸ்எனக் கூறிநின்ருர். திரு. வி. எஸ். பிள்ளையவர்கள் பேசியபோது, இவ்வருடம் தமிழாசிரியசங்கம் தமிழுக்குத்தொண்டுசெய்த சங்.பிறதர் ஒருவருக்கு ஆசிரியமணிப்பட்டம வழங்கியமை அதிகம்தகுதியான செயலேயெனப்பாராட்டினுர்.

### உள்ளூர்விமான தபாற்சேவை

உள்நாட்டு விமான தபாற்சேவையை விஸ்தரிப்பதுபற்றிப் போக்குவரத்து மந்திரிகாரியாலயம் தற்போது ஆலோசனைசெய்துவருகிறது. கொழும்பு, யாழ்ப்பாணம், திரிகோணமலை, மட்டக்களப்பு, காலி, அனுராதபுரமாகிய நகர்களை இணைக்கும் விமானத்தபால் சேவைக்குரியதிட்டம்ஒன்றைத் தயாரிக்குமாறு போக்குவரத்துமந்திரி விமானப்போக்குவரத்து அதிகாரிகளைக் கேட்டிருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சதாசகாயமாதா கோணம்

(முன்தொடர்ச்சி)

குருவானவர்ஒருவரைக் கண்டமாத்திரத்தில் வயோதிபருக்குவந்த கோபமும், ஆத்திரமும் அவருடைய மெச்சுரையைக்கேட்டதும் தீர்ந்துவிட்டன. குருவானவரின் வார்த்தைகளைக்கேட்டு அவர்ஒருவிதசந்தோஷமும் அடைந்தார்.

வயோதிபர் சற்றுத்தாழ்ந்தகுரலில் விளையாட்டாக, "சரி, என்னைப்பரிகாசம் பண்ணுகிறீர் என்பது எனக்கு விளங்கும்" என்றார்.

"பெரியவரே! அப்படி விளங்க வேண்டாம். நான்சொல்வது உண்மை. கள்ளங்கபடமாக நான் உம்மோடு பேசவில்லை என்பதை நன்றாகநம்பும்" என்றார் குருவானவர்.

"உமது கபடமில்லாத்தன்மையை மெச்சுகிறேன்" என்று சொல்லிக்கொண்டு தோட்டத்தின் வெளிவாயிலடிக்குவந்து உள்ளன்புடன் அவரோடு கைகுலுக்கினார் வயோதிபர்.

"இதுகாலவரை குருமார்எல்லோரும் சுயநலவாதிகள். ஈனஇரக்கம் இல்லாதவர்கள். பொதுமக்களை அணுப்புபவர்கள்என்றே எண்ணியிருந்தேன். குருமாரின் சமுத்துப்பட்டியைக் கண்டாலே எனதுபித்தப்பை கலங்கிவிடும். குருமாரைப்பற்றிய எனதுஅபிப்பிராயம் தப்புஎன்று இப்போது உணருகிறேன். தயவுசெய்து எனதுதோட்டத்துக்குள்வந்து எனதுபூச்செடிகளைப் பார்த்துச் செல்லலாகாதா? என்றார்.

"மெத்தச்சந்தோஷமாக வருகிறேன்" என்று சொல்லி இருவரும் பழையசிநேகிதர்போலச் சம்பாஷித்துக்கொண்டு தோட்டத்துட்பிரவேசித்தோம்.

வயலெற் புஷ்பச்செடிகள் உள்ள ஒருபாத்திக்குக்கிட்டச் சற்றுத்தங்கினேம். அப்போதுவயோதிபர், "எனது தோட்டம உங்களுக்குப்பிடித்ததா? என்றுவினவினர்.

"பிடித்ததாஎன்று கேட்கிறீர்கள்? ஆருக்குத்தான் இது பிடிக்காது? உண்மையாகவே மிக்க அலங்காரமான தோட்டம். அதோதெரியும் அந்த வயலெற் புஷ்பங்களைப் பாருங்கள். எவ்வளவு அழகாக இருக்கின்றன" என்றார்.

"ஆம், அவைகள் அழகானவைதான். அதிகநேரத்தை அவைகளிற்றான் செலவழிக்கிறேன். ஏனெனில், அந்தப் புஷ்பங்களிற்றான் எனக்கு வெகு பிரியம். உங்களுக்கும் அவற்றிற்சிலவற்றைத் தரலாமா? என்றார் வயோதிபர்.

"தாராளமாய்த் தாருங்கள். அவற்றைநான் சதாசகாயமாதாவின் பாதங்களில் சாற்றுவேன். அவவும்அவற்றிற் பிரீதியடைவாஎன்பதில் சந்தேகமில்லை. அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்றேன்.

"அவவும் பிரீதியடையலாமாக்கும்" என்று பிரெஞ்சுக்காரருக்குள்ள இயற்கையான தோளசைப்போடுசொன்னர்.

தோட்டத்தின்மத்தியில் இருந்த ஒருகல்மேசையண்டை இருவரும் வந்துசேர்ந்தோம்.

"தயவுசெய்து இங்கேஉட்கார்ந்து என்னோடு ஒருகிளாஸ்உவைன் (திராட்சரசம்)பருகக்கூடாதா?" என்றுகேட்டார்.

"அதற்குந்தடையா? சந்தோஷமாகக்குடிப்பேன். ஆனல், ஒருநிபந்தனை" என்றேன்.

"என்னநிபந்தனை?" என்று சற்றுத் திகைப்பான பார்வையுடன் கேட்டார்.

"உங்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால் நான்வயதில் எவ்வளவோகுறைந்தவன். எனவே, நீங்கள் அதோவிருக்கும் கதிரையில் உட்காரவேண்டும். நான் இந்தமாக்குத்தியில் உட்காருகிறேன்" என்றேன்.

வயோதிபரின் முகத்திற்தோன்றிய அதிசயப் பார்வையை விபரிக்கவேமுடியாது. கதிகலங்கியவர்போல் தோன்றினர். தனக்குள் ஏதோ முணுமுணுத்தார். நான் கதிரையில் உட்காரவேண்டுமென வற்புறுத்திச் சிலசமாதானங்கள் கூறினர். ஆனல், நான் விட்டுக்கொடுக்கவில்லை.

"சரிநீங்கள் சொல்வதுபோல் செய்யலாம். நான் இப்படி ஒருபோதும் எண்ணியிருக்கவில்லையே! இத்தனை வருடகாலமாக நான் ஒருபெரிய முட்டாளாக இருந்துவிட்டேனே. மன்னிக்கவேண்டும். நான்போய் உவைன் எடுத்துவருகிறேன்" என்று சொல்லி என்னை அவ்விடம்விட்டுச் சென்றார். போகும்போது தனக்குள்ளே "நான் பெரியமுட்டாள்" என்றே முணுமுணுத்துக்கொண்டார்.

சிலநிமிஷங்கள்கழித்து ஒருதட்டிலே ஒருபோத்தல் உவைனும, இரண்டு கிளாசுகளும், சில கேக்குத்துண்டுகளும் கொண்டுவந்தார். மரங்கள், பூச்செடிகள் புஷ்பங்கள்நிறைந்த தோட்டத்தில் நறுமணங்கமழுந் தென்றல்வீச, எல்லாம் இன்பமயமாகத் தோன்ற, நாம்அமர்ந்திருந்து உவைன் அருந்தினேம். புஷ்பங்களைப்பற்றிப் பேசினேம் — பிராஞ்சிய அரசியல் விஷயங்களைப்பற்றிக் கதைத்தோம். கதையோடுகதையாக நமது சம்பாஷணை வேதவிஷயங்களிலும் சென்றுவிட்டது.

தனது13-ம்பிராயத்தில் நெப்போலியனுடையபட்டாளத்திலே தான் பாண்டுவாத்தியகோஷ்டியில் மேளகாரனுகச் சேர்ந்துகொண்டவிதத்தையும், பின்பு துன்மார்க்கபடைவீரரின் சூழ்ச்சிகட்குஇரையாகி மிருகத்தனமாக நடந்துகொண்டதுமல்லாமல் அவர்களின் தூண்டுதலுக்கிணங்கி ஒருபோதும் எந்தத்தேவாலயத்திலும் காலெடுத்து வைப்பதேயில்லையென்று வாக்குத்தத்தம் பண்ணிக்கொடுத்ததைப்பற்றியும் எனக்குச்சொன்னர். "எனக்கு இப்போது 84வயது. நான்கொடுத்தவாக்கை இதுவரை பிரமாணிக்கமாகக் காப்பாற்றிவந்திருக்கிறேன். 71வருடங்களாகச் செபமும் இல்லை. தேவதிரவிய அனுமானங்களும்இல்லை" என்று தனதுகதையை முடித்துக்கொண்டார் வயோதிபர்.

அவர்கதைத்தபோது நான் அதிசயப்பட்டதாகக் காட்டவில்லை. இடையிடையே எனது திருத்தொண்டின் மூலம் நான் அடைந்த சொந்தஅநுபவங்களைப்பற்றியும், தேவனின் நன்மைத்தனம், இரக்கம், தயவுமுதலியவற்றைப் பற்றியும், பட்டதும்படாததுமாக எடுத்தோதினேன்.

(தொடரும்)

---

● சிந்துநதித் தண்ணீர்பற்றிக் கடந்த பன்னிரு ஆண்டுகளாக இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே இருந்துவந்த தகராறு கடைசியாகச் சென்றதிங்கட்கிழமை தீர்ந்துவிட்டது. அன்றுதினம் இதற்கான ஒப்பந்தத்தில் இந்தியபிரதமர் நேருவும், பாகிஸ்தான் ஜனாதிபதி [illegible] கைச்சாத்திட்டனர்.

# சுதேச வர்த்தமானம்

### பண்ணைக் கடற்பாதை

பண்ணைக்கடற்பாதை வேலைமுழுவதும் வருகிறஜப்பசிமாத இறுதிக்குள் பூர்த்தியடைந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. கற்கள்போட்டு இன்னும் நிரப்பப்படாதிருக்கும் சுமார்இருபது அடிநீளமானகடலும் இப்போது கற்கள்போட்டு நிரப்பப்படுகிறது.

### நஷ்டஈடு கிடைக்கமாட்டாது

1958-ம்ஆண்டின் அவசரகாலச் சட்டத்தின்போது அரசாங்கம்எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின்விளைவாக உயிர்இழந்தவர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடுகொடுக்கமாட்டாதென்று நிதிமந்திரி சென்ற புதன்கிழமை சனப்பிரதிநிதிகள்சபையில் தெரிவித்திருக்கின்றார்.

### வடபகுதிக்கு மேலும்படைகள்

வடபகுதியிலும், வடகிழக்குப்பகுதியிலும் கள்ளக்குடியேற்றத்தைத் தடைசெய்வதற்காக ஏற்கனவே இருந்துவரும் இராணுவபலத்தை அதிகரிக்கச் செய்யுமாறு இலங்கை இராணுவத்தைச்சேர்ந்த சுமார் 2,000பேர் இம்மாதஇறுதியில் அனுப்பப்படவிருக்கிறார்கள். இவர்கள் இவ்விருபகுதிகளிலும் பலவேறிடங்களிலும் காட்டுப்பிரதேசங்களில் முகாமிட்டுக் கரையோரப் பகுதிகளைக் காவல்செய்வார்கள். இலங்கை-விமானப்படையைச்சேர்ந்த விசேஷபிரிவுகளும் காங்கேசன்துறையில் அமர்த்தப்பட்டு, அங்கிருந்து விமானங்கள்மூலம் காவல்செய்யவிருக்கின்றன.

### கருப்புவெட்டப் பட்டாளம்

கந்தளாய்க் கரும்புத்தோட்டத்திலே கரும்புவெட்டுவதற்கென்று இலங்கைப் பட்டாளத்தைச்சேர்ந்த 400பேர் அனுப்பப்படவிருக்கின்றனர். கந்தளாய்ச் சீனித்தொழிற்சாலைக்குத் தினமும் 1,500தொன்கரும்பு தேவைப்படுகிறது. இப்பொழுது உள்ளூர்த் தொழிலாளரும், இளம்விவசாயிகள் சங்கங்களைச் சேர்ந்தவர்களும் அங்கு கரும்புவெட்டுகிறார்கள். இவர்கள் தொகை போதாமையால்தான் பட்டாளத்தைச்சேர்ந்தவர்கள் அனுப்பப்படவிருக்கின்றனர். இவர்கள் நேற்றைத் தினம் ஒருவிசேஷறெயின்வண்டியிலே கந்தளாய்க்குப் பயணமானர்கள். இன்னும்2,000ஏக்கரில் கரும்புவெட்டப்பட வேண்டியிருக்கிறது.

---

## திருமணம்

சில்லாலைவாசரான திரு. நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்களின் புதல்வரும், பொலனறுவைக் கச்சேரியில் உத்தியோகம் வகித்திருப்பவருமான திருவளர் செல்வன் ஏ. மரியநாயகத்துக்கும், யாழ்ப்பாணம் முத்து வைத்தியசாலை அதிபரான ஆயுள்வேத வைத்தியர் திரு. அ. செபஸ்தியாம்பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புதல்வியும், கண்டியிலே நல்லாயன் கன்னிகாமடக் கலாசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றுகிறவருமான திருவளர் செல்வி அன்னறெஜினம்மாவுக்கும் சில்லாலை, பரிசுத்த ஆரோக்கியமாதாவின்கோவிலிலே, திரளான இனசனர் கூடியிருந்த சமுகத்திலே சென்ற 25-8-60 வியாழக்கிழமைகாலை 8 மணியளவில் வண. எல். டெய்ஸி சுவாமியவர்களால் திருமணவைபவம் சம்பிரமமாக நடந்தேறியது. அதன்மேல் நிறைவேறிய பாட்டுப்பூசையின்பின் புதுமணத் தம்பதிகள் வாத்திய வரிசைகளுடன் ஊர்வலமாக மணமகன் இல்லஞ்சேர்ந்து பரிமளிப்பான வரவேற்பு உபசாரம் அருளப்பெற்றார்கள். இப்புதிய குடும்பமானது பல்லாண்டு [illegible] வாழுமாறு எல்லாம்வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக!

### மட்டக்களப்பு அரசாங்கஅதிபர்

மட்டக்களப்பின் புதியஅரசாங்க அதிபராகத் திரு. ஏ. எஸ். நவரத்தினராஜாஅவர்கள் பதவியேற்றிருக்கின்றார். இதுவரை மட்டக்களப்பு அரசாங்கஅதிபராய் இருந்துவந்த திரு. பி. ஆர். தேவராஜன்அவர்கள் நான்கு மாதலீவிலே விசேஷபயிற்சிக்காக வெளிநாடுசென்றிருக்கின்றார்.

### கரும்புத்தோட்டத்தில் தீ

கந்தளாய்க் கரும்புத்தோட்டத்தில் ஏற்பட்ட தீவிபத்தொன்றால் ஒருலட்சம்ரூபா மதிப்புள்ளசேதம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. சுமார்75ஏக்கர் காணியிலுள்ள கரும்புகளும், அவற்றைத் தோட்டத்திலிருந்து தொழிற்சாலைக்கு ஏற்றிச்செல்வதற்கெனப் பாவிக்கப்பட்டுவந்த ஒன்பதுவாகனங்களும் தீக்கிரையாயின.

### வயதுபற்றிய ஆட்சேபனை

பாடசாலைகளிலே பிள்ளைகள் சேரவேண்டியவயதை நாலரையிலிருந்து ஆறுவயதாக உயர்த்துவதென்று கல்விமந்திரி செய்திருக்கும்முடிவு அடுத்துநிகழும் 1961-ம்ஆண்டு தை மாதமுதல் நடைமுறைக்கு வரவிருக்கின்றது. இவ்விதம் கல்விமந்திரி செய்திருக்கும் முடிவைவிட்டுச் சில உதவிமந்திரிகள்உட்பட 25பேருக்கு மேற்பட்ட அரசாங்ககட்சி எம்.பி.கள் அதிருப்திதெரிவித்துக் கைசாத்திட்டு மனுவொன்று தயாரித்திருக்கிறார்கள்.

---

## மட்டக்களப்புத் தாண்டவன்வெளித் தபால்

**தாயார் தினம்:** சிலுவையடியில் நாம் பெற்ற தாயாரின் பிறந்த தினமாகிய புரட்டாசி 8-ந் திகதியன்று எமது பங்குத்தேவாலயத்தில் கூடிய பெரியோர், சிறியோர் யாவரும் இயற்கை மலர்களைக் கரங்களில் ஏந்தியிருந்தார்கள். கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமிகள் தமது கரங்களிலேந்திய ரோஸாப் புஷ்பங்களுடன் தேவ அன்னையின் பீடத்தையணுகி, "ஏற்பீரம்மா தாயே" என்னும் பாடலுடன் "ஈதோ பூச்செண்டுகள்; எங்கள் இதயங்கள்போல் மாதாவே வாங்கி உமதுதிருமகனரிடம் கொடும்" என்று பாடி அன்னையின் பாதங்களில் அவைகளைச் சாத்தினர். தொடர்ந்து பூசைப்பரிசாரகர், பக்திச்சபையினர், பங்குக்கிறீஸ்தவர்கள் பூச்செண்டுகள் சாத்தும்வைபவம் நடந்தேறியது. அதன்மேல் பாட்டுப்பூசை நிறைவேறியது.

**வியாகுலத்தாயார்:** எமதுபங்குத்தேவாலயம் அக்காலமுதல் வியாகுலஅன்னையின் நாமத்தையும் கூடக்கொண்டு பொலிவுற்று விளங்குகிறது. இங்கே வியாகுலஅன்னையின் திருநாள் வருடத்தில்இருமுறை வியாகுலமாதா பக்திச்சபையினரால் கொண்டாடப்படும் வழமையை மேற்கொண்டு சென்ற 14-9-60 புதன்வாரம் சதாசகாயமாதா நோவனையின்பின் மாலையாராதனை பாடிச் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டது. திருநாளன்று காலை பாடற்பூசையின்பின் வியாகுலமாதா பக்திச்சபையினர் ஒன்றுகூடிக் குருமனைசென்று கட்டளைக்குரவரைச் சந்தித்து, அன்பளிப்புகள் அளித்து, நன்மொழி கேட்டு இன்புற்றேகினர். பிற்பகல் வியாகுலஅன்னையின் திருச்சுரூபம் ஆலயவீதியை வலம்வந்துசேர்ந்ததும் திருச்சுரூப ஆசீர்வாதம் வழங்கப்பட்டது.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னமலரின் அன்னை தந்தையர்

— வண. அல்பான் சுவாமிகள் —

(தமிழாக்கம்: (சா. பெ)

**இல்லறவாழ்வும் இறைவனுக்கு உகந்ததே:**

அன்று ஆடிமாதம் 13-ம்நாள். இற்றைக்குச்சரியாக 102 ஆண்டுகளின் முன் பிரான்ஸின் இயற்கைவனப்பு வாய்ந்த அலன்கொன்நகர ஆலயமொன்றில் லூயிஸ் மாட்டின் சத்தியதிருச்சபையின் சடங்கானுசாரத்திற்கிணங்க ஷீலிகுயிறின் எனும்மங்கையைத் தன் துணைவியாக ஏற்றுக்கொண்டார் பதினைந்து வருடங்களின்பின் 1873-ம் ஆண்டு தைத்திங்கள 4-ம்நாளில் இத்தம்பதிகள் தங்கள் கடைசிப்புதல்வி தெரேசுக்கு ஞானஸ்நானம் கொடுப்பிக்க அவ்வாலயம் வந்துசேர்ந்தனர். அரை நூற்றுண்டுகட்குப்பின் அத்தேவாலயம் அச்சிறுமியின் சுரூபத்தையே தனதுபீடத்தில் வைத்துவணங்கும் பாக்கியம்பெற்றது.

யேசுவின் சின்னமலர்எனத் தன்னையழைத்துக்கொண்ட இந்த அர்ச்சியசிட்டவளின் வரலாறு எல்லோராலும் நன்கறியப்பட்டது. இம்மலரைப்பயந்த செடிகளின்வரலாறும் புனிதமானது. நவநாகரிகக் கொள்கைகள் நடமாடிக் கத்தோலிக்கவிசுவாசத்தின் வித்துக்கு விஷமிட்டுக் கொண்டிருக்கும் இன்று ஒவ்வொருகத்தோலிக்க குடும்பத்தினராலும் இது அறியப்படவேண்டியதொன்று.

லூயிஸ் யோசெவ்மாட்டின் 1803-ம் ஆண்டு ஆவணி 22-இல் பொர்டெக்ஸ் என்னுமிடத்தில் பிறந்தார். சிலவருடங்களின்பின்னர் அவரது குடும்பத்தினர் அலன்கொன்நகரில் வசிக்கத்தொடங்கினர். இவர்கள் கட்டுப்பாடான பக்தி வைராக்கியமும், கண்ணியமான நடத்தையும் கொண்டவர்கள். திவ்வியபூசையின்பேரில் லூயிசின் தந்தை கொண்டிருந்த அளவுகடந்த பக்தியைப்பற்றி அவரது அயலவர்கள் அதிசயித்தபோது அவர் கூறுவார்: "நான்விசுவசிக்கிறேன், அதிகமதிகமாக விசுவசிக்கிறேன்."

லூயிஸ் கல்விபயில வெளியூர்சென்ற பின்னர் அவரின்பெற்றோர் அடிக்கடி லிகிதங்கள் வரைவதன்மூலம் தங்கள் புதல்வனின்விசுவாசம் தளர்ந்துபோகா வண்ணம் காப்பாற்றினர். அவரது அன்னையின் கடிதமொன்று பின்வருமாறு கூறுகின்றது: "அன்பின்மகனே, இரவில் யான்காணும் இன்பக்கனவுகளனைத்தும் உன்னையே மையமாகக் கொண்டுள்ளன. இறைவன் சந்நிதானத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கும் தூதர்போல் தூய்மையான உள்ளத்துடன் நீயும்அவருக்குப் பணிபுரியவேண்டுமென்பதே என் அவா. இந்தக் கண்ணீர்க்கணவாயில் எனதுபிள்ளைகள் சமாதானத்துடனும், அமரிக்கையுடனும சீவிக்கவேண்டுமென்பதே நான் இறைவனைநோக்கிக் கேட்பதெல்லாம்."

வாசிப்பில் அதிகபிரியர் மாட்டின். தனதுகையில் எழுதுகோலுடன் குறிப்புகள் எடுத்துக்கொண்டே வாசிப்பார். இதன்பயனாக அவரதுஅறிவு பன்மடங்கு விர்த்தியாகியது. ஆரம்பக் கல்வியின்பின்னர் ஸ்ருஸ்பேர்க்நகர் சென்று கைக்கடிகாரங்கள்பற்றிய கலையிலீடுபட்டார்.

1845 லூயிஸ் தனது 22-ம்வயதில் துறவறத்தை மேற்கொள்ள விரும்பினார் எட்டாயிரம்அடி உயரத்தில் பெனின் அல்ப்ஸ் சிகரத்தில அமைந்த பேனு ஆச்சிரமத்துக்கு லூயிஸை இழுத்துச்சென்றது இந்தஎண்ணம. கர்த்தனின் பணிக்குத் தம்மைமுற்றாக அர்ப்பணிக்கவிரும்பிய இந்தஇளைஞனுக்கு லத்தீனிலே அதிகபாண்டித்தியமில்லையெனக்கண்டார் மடாதிபதி. லத்தீனிய மொழியில் பாண்டித்தியம் பெற்றபின் வருமாறு திருப்பிவிட்டார். உள்ளம் நிரம்பிய வேதனையுடன் மலைப்படிகளால் இறங்கினார் மாட்டின். ஆச்சிரமத்தின் உயர்ந்த மதிற்சுவர்கட்கிடையில் தனது இறுதிகாலத்தை இறைவனின்சேவையில் கழிக்கவிரும்பியவருக்கு அதிபரின் பதில் அதிகதுயரத்தை யளித்தது.

ஆகவே, லத்தீன், கிறீக்மொழிகளில் நல்லபயிற்சிபெறத் தொடங்கினார். கடுமையாக உழைத்தார். இறைவனின் எண்ணமோ வேறாயிருந்தது. கடும் உழைப்பு மாட்டினின் தேகநிலையைப் பாதித்தது. தம்மால் மேற்கொண்டு கல்விகற்க முடியாதிருப்பதை உணர்ந்தபின் அம்முயற்சியைக் கைவிட்டார். தேவனின்கையில் தமதுவாழ்வின்குறிக்கோளைக் கையளித்தவராய்ப் புதிய முயற்சியொன்றில் ஈடுபட்டார்.

1850. லூயிஸ் அலன்கொன்நகரில் ஒருகடையை விலைக்குவாங்கிக் கைக்கடிகாரங்களையும், நகைகளையும் தயாரித்து விற்பனவுசெய்யும்தொழிலில் ஈடுபட்டார். கண்டோரனைவரையும் கவரும்தோற்றமும், வட்டவடிவமான முகமும், அன்புததும்பும் விழிகளும், கம்பீரமான நடையும்கொண்ட மாட்டின் வியாபாரத்தில் வாடிக்கையாளர்களைக் கவர்ந்ததில் ஆச்சரியமேதும் இருக்கவில்லை.

ஞாயிற்றுக்கிழமைகளில் தமதுவேத கடமைகளைச் சரிவரநிறைவேற்றுதற்குதவியாக மாட்டின் தமதுகடையைச் சாத்திவிடுவார் மாலைவேளைகளில் சோலைக்காடுகளினூடே நீண்டதூரம் நடந்துசெல்வது அவருக்கு மிகவும் பிடித்தமானவைகளுள்ஒன்று. மீன்பிடித்து விளையாடுவதும் இவரின் பொழுதுபோக்குகளுள் முக்கியஇடம் பெறும். பட்டினத்துக்குவெளியே ஒரு சிறிய மாளிகையை விலைக்குவாங்கி அதில்வசிக்க ஆரம்பித்தபின் அவருக்கு நல்லஓய்வுகிடைத்தது. அவரது நலவாசினைக்குச் சனசந்தடியற்ற அம்மாளிகை மிகஉதவியாயிருந்தது. தொழில், வாசிப்பு, செபம், இளைப்பாற்றி, நல்லபொழுதுபோக்குகள். இவ்விதம் மாட்டினின்வாழ்க்கை அமைதியாக, ஆனால் ஆனந்தமாக ஓடிக்கொண்டிருந்தது.

ஷீலிகுயிறின் 1831-இல் பிறந்தாள். இறைவனின்பக்தியிலும், அன்பிலுமே வளர்ந்தாள். ஒருநாள் கிறிஸ்துவின் பால் அவள்கொண்டிருந்த புனிதகாதல் ஷீலியைப் புனிதவின்சென்ற்டீபோல் கன்னிகாமடத்திற்கு இழுத்துச்சென்றது அங்கு பயிற்சிபெற்று ஒருகன்னிகையாக— கிறீஸ்துவின் மணவாட்டியாகத் தமதுவாழ்க்கையைச் செலவிடுவதே அவளது அவா. ஆயின் அவளின் விருப்பம் நிறைவேறவில்லை. ஷீலியைச் சேர்த்துக்கொள்ள முடியாதெனத் தெரிவிக்கப்பட்டது. உடைந்தஉள்ளத்துடன் வெளியேறிய அக்கன்னிகை "ஆண்டவரே, என்சோதரியைப்போல நானும் கன்னிகையாகி உமக்குச் சேவைசெய்ய ஆசித்தேன்; தடுத்துவிட்டீர்; ஆகவே, இவ்வாழ்க்கையில் பிரவேசிப்பேன், எனக்கு ஏராளமான குழந்தைகளைத்தாரும்; அவைகளனைத்தையுமே உமதுசேவைக்கு அர்ப்பணித்துவிடுவேன்" என மனதுக்குள் கூறிய வண்ணம் சென்றாள்.

1853-இல் ஷீலி சரிகைநாடாக்களை இழைத்து, பெரியவிற்பனவு நிலையங்களுக்கு விநியோகிக்குபபணியை மேற்கொண்டாள். சாதாரணஉயரமும், எளிமையான —ஆயின் தூய்மையான ஆடையணிகளும், பொன்னிறக்கேசமும்கொண்ட அவளது தோற்றம் விற்பனவுநிலையங்களில் செலவாக்கை அதிகரிக்கச்செய்தது. தனதுவாழ்வு வளம் பெறுதற்கு நிரந்தரவருவாயை வகுத்துக்கொண்ட ஷீலி தன்பரிசுத்தத்தனத்தைப் பேணுவதிலும் அக்கறைகொண்டாள். தனிமையில்வாழ்ந்தவள் விவேகத்துடன் தனவாழ்க்கைப்படகைச் செலுத்தியமையால் அவளின்கற்பைச் சூறையாட எவராலும்முடியாதிருந்தது. இறைவனுக்கே தன்னைமுற்றாக ஒப்படைத்த ஷீலியின் விசுவாசமே அவளை எப்போதும் காப்பாற்றிவந்ததெனில் அதுமிகையாகாது.

துறவறத்தைவிரும்பி அதுகைகூடாமற்போயினமையால் இல்வாழ்வை நாடிய மாட்டினும், ஷீலியும் ஒருதினம் சந்தித்தனர். இருவரிடமும் விளங்கிய நற்குணங்கள்பல அவர்களை நெருங்கிய நண்பர்களாவதற்குத் தூண்டுகோலாயிருந்தன. ஆகவே, அவர்கள் விரை

(தொடர்ச்சி 8-ம்பக்கம்)



# இளைஞர் பக்கம்

## இன்றைய இளைஞர்களும் அவர்கள் இலட்சியமும்

இளைஞர்களே! உங்கள் வருங்கால வாழ்க்கையை வளமுறச்செய்யத் தீவிரமாக உழைக்கிறீர்களல்லவா? மரக்கலத்தின் திசையறிகருவி உரிய திசையை நோக்கித் திரும்பிஇருப்பதுபோல உங்கள் எண்ணங்களும் ஏதோ ஒருகுறிப்பிட்ட இலட்சியத்தைக் குறிக்கோளாகக்கொண்டு இருப்பது மறுக்கமுடியாத உண்மை. இளஞ் சிங்கங்கள்போல சிலஆர்வமுள்ள இளைஞர்கள் ஆர்ப்பரித்து வீரமுழக்கம்செய்து தங்கள் ஆற்றல்மிகுந்த சொற்பொழிவுகளால் தன்னலமற்ற உழைப்பினால் சமூகத்தினிடையே அயராது பொதுநலம்ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு ஆற்றிவரும்சேவையை நல்லவர்கள் உவகையோடு பார்த்து மகிழ்ச்சியடைகிறார்கள். பெரும்பாலும் கத்தோலிக்க இளைஞர்களும், யுவதிகளும் ஆர்வத்தோடு சருவேசுரனுடைய தோத்திர மகிமைக்காக இவ்விதமாகப் பணிபுரிவதை வரவேற்கிறோம். ஆனால், நம்மிடையே எவ்வளவோ இளைஞர்களும், யுவதிகளும்நாகரீகம், நாகரீகம்என்று சொல்லிக்கொண்டு புரிந்துவரும் இழியசெயல்களை இங்கு எழுத்தில்வடித்துவிட ஊற்றுப் பேனாதான் வேண்டும். இன்றைய இளைஞர்களின் உள்ளங்களைக் கவர்ந்திருக்கும்சக்தி ஆபாசச் சித்திரங்களும், அதேபோல உடைநடை, பாவனையுள்ள ஆபரணங்களும் உண்டு. நம் தமிழ்நாட்டுப் பண்பாட்டிற்கே இழுக்கு வருவிக்கின்றனர் இன்றைய வாலிபர்களும்,வனிதையர்களும் அழகாகத் தமிழ்ப்பெண்கள் உடைதரிப்பதைஎவரும்விரும்புவார்கள். ஆனால், சமூகத்தையே சாக்கடையாக்க இன்றைய இளைஞர்களும், யுவதிகளும் முயற்சிக்கிறார்கள். ஆபாசமே அணிகலன்களாகக்கொண்டு இளங்காளையர்களின் கண்வீச்சுக்கு இலக்காகும் கன்னியர்களைக்கண்டு நல்லவர்கள் சோகிக்கிறார்கள், ஏன்? இவர்களைச் சீர்திருத்துவது எங்ஙனம். பாவையர்களைக்கண்டு பல்லிளிக்கும் சோதாக்களைச் சீர்திருத்துவது எப்படி? இவர்கள் இலட்சியம் உலகின் இன்பங்களை எல்லாம் ரசித்துச்சுவைத்துவிடுவது ஒன்றே. முதல்சொல்லிய இலட்சியவாதிகள் கிறீஸ்துநாதருக்குப் பிரியப்படக் கூடியவர்கள். பின் சொல்லிய இலட்சியவாதிகள் தேவனின் கோபத்துக்கு இலக்காகுகின்றனர். இளஞ் சிங்கங்களே! பெண்மணிகளே! நீங்கள் எந்தஇலட்சியத்துக்காக உழைக்கிறீர்கள். இம்மையோடு உங்கள்வாழ்க்கை முடிந்துவிடுகிறதா? அல்லஅல்ல மறுமையும் ஒன்று உண்டு. அன்றலர்ந்து வாடும் பூவைப்போல வாழ்க்கை நிலையற்றதுஎன்பது அழியாதஉண்மை.

—(✕)—

## சுவிசேஷ சிந்தனை

"வாலிபனே, உனக்குச் சொல்லுகிறேன் நீ எழுந்திரு" (லூக். 7 : 11—16))

யேசுநாதர் நாயீம்பட்டணத்தின் வாசலருகே வந்தபொழுது திரளான ஜனங்கள் அவருடைய சீஷர்களுடன் அவர்பிறகே வந்தார்கள். இதோ ஒரு தாய்க்கு ஏகமகனாகிய ஒருவன் செத்துஅடக்கம் செய்யும்படி பட்டினத்தின் வெளியே கொண்டுவரப்பட்டான். அவனின்தாயோ விதவையாயிருந்தாள். பெருந்தொகையான பட்டணத்தோர் அவளோடுகூட அங்குவந்தார்கள். யேசுநாதர் அந்தவிதவையைக்கண்டு மனமிரங்கி, நீ அழவேண்டாம் என்று ஆறுதல்கூறினார். பின் பாடையைத்தொடவே அதைச்சுமந்து சென்றோர் நின்றார்கள். "வாலிபனே, உனக்குச்சொல்லுகிறேன் நீ எழுந்திரு" என்று சொல்ல வாலிபன் உடனேஎழுந்து சம்பாஷிக்க ஆரம்பித்தான். அவனை அவன்தாயிடம் ஒப்புவித்தார். இதைக்கண்டு சகலரும் பயமடைந்தார்கள். ஓர் மகாபெரும் தீர்க்கதரிசி தோன்றியுள்ளார்என்று தேவனுக்கு நன்றி ஸ்துதி கூறினார்கள்.

தேவன் இதனிலும்பார்க்க மேலான அற்புதத்தை நம்ஒவ்வோர்மேலும் செய்கிறார். நமது இரட்சகரும், ஆண்டவருமாகிய யேசுநாதர் தமது பாடுகளின்பலனை நாம் அடையும்படியாகப் பாவசங்கீர்த்தனம் என்னும் தேவதிரவிய அனுமானத்தை ஏற்படுத்தியுள்ளார்.

ஒருவர் சாவானபாவம் கட்டிக்கொள்ளும்போது அவர் நித்தியத்திற்கு மரிக்கிறார். அதாவது பரலோக இராச்சியத்தில் பிரவேசிப்பதற்கு அவருக்கு உரித்தில்லாமல் போகிறது. நித்தியஆக்கினைக்கு உரித்துள்ளவராக மாற்றுகிறது. குருவானவர்பாவசங்கீர்த்தனத்தொட்டியிலிருந்து உன்பாவங்களைப் பொறுக்கிறேன்என்று சொல்லும்பொழுது அவன் மறுபடியும் உயிர்பெற்றுப் பரலோகஇராச்சியத்துக்கு உரித்துள்ளவனாக மாறுகிறான் இதிலும்பார்க்கப் பெரியஅற்புதம் உலகில்உண்டா? என்று நீங்கள் சிந்தித்துப் பாவசங்கீர்த்தனம் என்னும் தேவதிரவிய அனுமானத்தைத் தகுந்தவிதமாய்ப் பெற்றுக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அன்புத் தம்பி, தங்கையரே!

"சின்னவழி கண்ட சிறுமலர்" என்ற கட்டுரையைக் கீழே படியுங்கள். சின்னமலர் யார்? அவர்தான் பாலக யேசுவின் அர்ச். சின்னத்தெரேசம்மாள். அவருடைய திருநாள் ஐப்பசிமாதம் 3-ந் திகதி வருகின்றது. அதனுல் அவரைப்பற்றிச் சிறிது அறிவது நல்லதல்லவா. எனவே கீழேவரும் கட்டுரையைப் படித்து அறியுங்கள். அவருடைய சுகிர்த வாழ்வு உங்களுக்கும் முன்மாதிரிகையாக இருக்கவேண்டும். அவருடைய திருநாளைக் கொண்டாடத் தக்கவாறு ஆயத்தம்செய்ய இது உதவும் அல்லவா. அவர் புதுவேத நாடுகளின் பாதுகாவலர். எமது இலங்கைத்தேசத்திலும் தற்போது எழுந்திருக்கும் இன்னல்களில் இருந்து கத்தோலிக்கரைப் பாதுகாக்கும்படி அவரிடம் மன்ருடுங்கள்,

உங்கள் அன்புள்ள அண்ணு

## 'சின்னவழி' கண்ட சிறுமலர்

—: சுவாமி மரியருள் தம்புராஜ், மதுரை. :—

1873 தை 2-ம் நாள். பிரான்ஸ் நாட்டிலே, அலென்சோன் என்ற ஊரிலே ஒரு குழந்தை பிறந்தது. இல்லத்தை மகிழ்விக்க வந்த அந்த ஒன்பதாவது குழந்தைக்கு மரிபிரான்சுவா தெரேஸ் மாட்டின் என்று பெயரிட்டனர். விரைவிலே அந்தச் சிறு குழந்தை உலகமுழுவதும் நறுமணம் பரப்பும் சிறுமலராக விளங்கப்போவது அன்று ஒருவருக்கும் தெரியாது.

தெரேஸ் உதித்தது உத்தமமான கத்தோலிக்க குடும்பத்தில். அங்கு யேசுநேசச்செல்வம் மிகுந்திருந்தது. இளமைமுதலே குழந்தைகள் இறையன்பில் வளர்ந்தனர். சிறுவயதிலேயே இரண்டு பையன்களும், இரு பெண்களும் இறைவனடி சேர்ந்தனர். எஞ்சியிருந்தவர் ஐந்து பெண்கள். அவர்களும் ஒருவர்பின் ஒருவராகக் கன்னியர்மடம் புகுந்தனர்.

தெரேஸ் பதினைந்து வயதிலேயே கார்மேல்மடம் புக விரும்பினுள். உலகை மறந்து, நான்கு சுவர்களின் மத்தியிலே சிறைப்பட்டு, கடவுள் தியானத்திலும், உடல் ஒறுத்தலிலும் வாழ்நாளை முழுவதும் செலவிடுவது என்பது ஒரு சிறுமியால் தாங்கக்கூடியதா? பல தடைகள் ஏற்பட்டன. சிறுமி தயங்கவில்லை. ரோமாபுரி சென்று, பரிசுத்த பாப்பரசரிடமே அனுமதிகோரி மன்ருடினுள்.

இறுதியாகக் கார்மேல்மடம் புகுந்தாள். "குழந்தை யேசுவினுடையவும், திருமுகத்தினுடையவும் தெரேசாள்" எனப் பெயர்பூண்டாள். ஒன்பது ஆண்டுகள்தான் கார்மேல் துறவியாக வாழ்ந்தாள். 24 வயது எழில் மங்கையாக இறைவனிடம் சென்ருள். அவளது துறவு வாழ்க்கையில், சங். தாயார் அவர்களின் கட்டளைக்கிணங்கத் தன் வாழ்க்கை வரலாற்றை எழுதினுள். "ஓர் ஆன்மாவின் வரலாறு" என அதற்கு அழகுப்பெயர் சூட்டினுள். தன் ஆன்மாவின் உள்ளாந்தரத்தில் நிகழ்ந்த அருளின் ஓட்டத்தை, இறைவன் அளித்த ஆறுதல்களை, இறைவனை நாடி ஆன்மா கொண்ட வேட்கையை, ஆன்ம அன்பரின் பிரிவால் கண்ட வரட்சியையெல்லாம் அப்படியே எழுதிவைத்தாள்.

ஒரு கார்மேல் துறவி இறந்ததும் அவரது வாழ்க்கைச் சுருக்கத்தை அச்சிட்டு, ஏனைய கார்மேல் மடங்களுக்கு அனுப்புவது வழக்கம். தெரேஸ் இறந்ததும் அவள் எழுதிய தன்வரலாற்றையே அச்சிட விரும்பினர். தெரேஸ் இறந்து ஓர் ஆண்டு ஆனதும் — 1898 ஐப்பசி மாதத்தில் "ஓர் ஆன்மாவின் வரலாறு" பிரசுரமானது. இரண்டாயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டன என்று கேள்வியுற்றதும், ஒருகன்னியர் "இரண்டாயிரமா? ஐயோ, அநேகம் பிரதிகள் மிஞ்சிவிடுமே! என்ன செய்வது?" என்று வாயைப்பிளந்தார்.

நடந்தது என்ன? பிரதிகள் மடத்துக்குமடம் சென்றன. வாசித்தவர் எல்லோரும் தங்கள் ஆன்மாவில் ஓர் உந்நத கிளர்ச்சி கண்டனர். புத்தகத்தை நண்பர்களுக்கு அனுப்பி வைத்தனர். 11-ம் பத்திநாதர் கூறியதுபோல "அதன் நறுமணம் கிறீஸ்துவ நெறியிலிருந்து வழுவியவரின் இதயங்களையே ஊடுருவியது. அதை வாசித்தவர்களில் பலர் மனந்திரும்பிக் கிறீஸ்துவின் அன்பில் நிலைத்தனர்." தெரேஸ் ஓர் அர்ச்சியசிட்டவள் எனப் பிரகடனம் செய்யப்படு முன்னரே நான்குலட்சம் பிரதிகள் அச்சிடப்பட்டன. இன்றுவரை சுமார் மூன்றுகோடி பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன.

உலகத்தின் கண்களில் படாமல் மடத்தின் மதில்களுக்குள் அடங்கி வாழ்ந்த ஓர் இளமங்கை திடீரென உலகப்புகழ் பெற்றதின் இரகசியம் என்ன? மரித்த இருபத்தெட்டே ஆண்டுகளில், முத்தர் பட்டம்பெற்ற இரண்டே ஆண்டுகளில், அவளது நான்கு அக்காள்மாரும் இன்னும் உயிரோடிருந்தபோதே அர்ச்சியசிட்ட பட்டம்பெற்று, "ரோசா மலர் தூவும் சிறுமலர்", "கைவிடப்பட்டோரைக் கைநெகிழாக் கன்னி" என்றெல்லாம் உலகமே ஏற்றிப் புகழ்பாடும் அளவுக்கு இந்தக் கன்னிகை ஆற்றிய அரும் செயல்தான் என்ன?

"என் அர்ச்சியசிட்டவள்", "எனக்கு வழிகாட்டும் வான்மீன்" என்று உரிமை பாராட்டிய 11-ம் பத்திநாதர் "எல்லா விசுவாசிகளும் இந்த அர்ச்சியசிட்டவளின் வாழ்க்கையைக் கவனித்து, அவளைப் பின்பற்றி, சிறு பிள்ளைகளைப்போல் ஆக வேண்டும். இல்லாவிடில் நமது ஆண்டவர் கூறியதுபோலப் பரலோக இராச்சியத்தினுள் நுழைய முடியாது. இப்படிக் குழந்தைக்குரியவிதத்தில் ஆன்ம வாழ்க்கை அமைந்தால், மனிதகுலமே எளிதில் சீர்திருந்துவது உறுதி" எனத் துணிந்து உரைத்தார்.

(தொடரும்)

## நாட்டு எலியும் நகரத்து எலியும்

இரண்டுளெலிகள் நட்பாக நாட்டுப்புறத்தில் வாழ்ந்துவந்தன. ஒருநாள் ஒருளெலி நகரத்திற்குச் சென்றுவிட்டது. சில மாதங்களுக்குப்பின் நகரத்துளெலி தன்நாட்டுப்புற நண்பனைப் பார்க்க வந்தது. தன்நண்பன் வந்ததைக் கண்ட நாட்டுப்புற எலி மிகவும் மகிழ்ச்சி கொண்டது. நகரத்திற்குச் சென்றுவந்த நண்பனை நாட்டுளெலி அன்புடன் வரவேற்றது. தான் சேர்த்துவைத்த பழவகைகள், கிழங்கு, தானியங்கள் முதலிய உணவைத் தன் நண்பனுக்கு அளித்தது. நகரத்து எலி நாட்டு நண்பனுடன் விருந்தாடி மகிழ்ந்தது.

நகரத்து எலி நாட்டுப்புறத்தில் கிடைக்கக்கூடிய எளிய உணவை இகழ்ந்து கூறியது. நகரத்தின் அருமை பெருமைகளையெல்லாம் எடுத்துச்சொல்லி, நாட்டுப்புறத்தைப்பற்றி இழிவாகப் பேசியது. நகரத்து எலி நாட்டுளெலியை நகரத்திற்குத் தன்னுடன் அழைத்தது. நகரத்தின் அற்புத வாழ்க்கையைக் காண வரும்படி வற்புறுத்தியது. நாட்டுளெலி அதற்குச் சம்மதிக்கவே, இரண்டு எலிகளும் நகரத்திற்குச் சென்றன. நாட்டு எலிக்கு நகரின் அழகையெல்லாம் நகரத்து எலி காட்டியது.

நகரின் நாகரீகவாழ்வையும், வானளாவிய அழகிய மாளிகைகளையும், வகைவகையான பழங்கள், உணவுப் பண்டங்கள் கடைகளில் குவிந்து கிடப்பதையும் கண்ட நாட்டு எலி பிரமித்துப்போய்விட்டது. நகர வாழ்க்கையே சிறந்தது என்று எண்ணத்தொடங்கியது. நகரத்து எலி தன் நண்பனுக்கு விருந்து வைக்க எண்ணி ஒருமாளிகைக்குள் அழைத்துச்சென்றது. அம்மாளிகையிலுள்ள சமையல்அறைக்குள் இரண்டும் புகுந்தன. அங்கே வகை வகையான தீன்பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன.

மெல்லமெல்ல இரண்டுளெலிகளும் உணவு உண்ணத்தொடங்கின. வாய் வைப்பதற்குமுன்பாகவே எலிகளின் ஓசைகேட்ட வேட்டைநாய் ஒன்று எலிகள்மேல் பாய்ந்தது. உடனே இரண்டு எலிகளும் ஓடிப் பதுங்கிக் கொண்டன. நெடுநேரம் அந்த வேட்டைநாய் எலிவளையின்வாயில் படுத்திருந்து எலிகளின் வருகையை உற்றுநோக்கிக்கொண்டிருந்தது. நாய் தங்களைக் கொன்றுவிடுமோ என்று அஞ்சி இரண்டு எலிகளும் வளைக்குள்ளேயே பதுங்கிப் பசியோடுகிடந்தன. நாய் சிறிதுநேரத்தின்பின் அவ்விடத்தைவிட்டுப் போகவே, நாட்டுளெலி நகரத்துளெலியைப் பார்த்து, "நண்பா! அஞ்சி அஞ்சி நகரத்தில் ஆடம்பரவாழ்க்கை நடத்துவதைவிட அமைதியாகவும், அச்சமில்லாமலும் வாழும் என் நாட்டு வாழ்க்கையே சிறந்தது; இன்றே நான் என் ஊருக்குப் போகிறேன்" என்று சொல்லி ஓட்டம்பிடித்தது.

— B. A. இராஜதுரை

சிறுவர் தொடர்கதைப் போட்டி முடிவுதிகதி 30-9-60. ஞாபகமிருக்கட்டும். முடிவு தினத்தின் பின்வரும் கதைகள் நிராகரிக்கப்படும்.

உங்கள் விஷயதானங்களை மேல்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்
"அண்ணு",
அர்ச். அன்னம்மாள் கோவில்,
பாண்டியந்தாழ்வு,
சுண்டிக்குளி.

### விடை அனுப்பியவர்களும் விடையும்

சென்ற 8-9-60 இல் வெளிவந்த கண்டுபிடியுங்கள் என்னும் பகுதிக்குச் சரியான விடை கண்டுபிடித்து அனுப்பியவர்கள்:

1. என். டி. றெட்றிக்கோ, கொச்சிக்கடை.
2. எஸ். ரி. மரியதாஸ், மஸ்கேலியா.
3. டி. இராயப்பன், மத்துகமம்.
4. மேரி திரேசா, அம்பகலை.
5. பி. பி யோசெவ், மன்னுர்.
6. வி. மரியாம்பிள்ளை, அனுரதபுரி.
7. ஜே. ஆக்கினேஸ் குலாஸ், பேசாலை.
8. எஸ். யேசுதாசன், மன்னுர்.
9. பி. சூசைதாசன் லோகு, பேசாலை.
10. ஜே. எல்மோ பீரிஸ், பேசாலை.
11. கி. செல்வராணி, கொழும்பு.
12. எம். மரியதாஸ், மடுல்கல்ல.
13. எஸ். எம். தாஸ், இளவாலை.
14. எ றெமியாஸ், புங்குடுதீவு.
15. எஸ். பங்கிராஸ் லோகு, பேசாலை.
16. ஜெ. மரியதாஸ், கொழும்பு.
17. வ. மரியம்மா, யாழ்ப்பாணம்.
18. மேரி பிலோமினு, நாவற்குழி.
19. எஸ். ஆர். ஏ. நவராஜா, சில்லாலை.
20. எஸ். தமியான், இளவாலை.
21. ஏ. ஈ. செபஸ்தியன், இளவாலை.
22. ஏ. றெஜீனு, புங்குடுதீவு.
23. எஸ். செபமணி, இளவாலை.
24. பி. அந்தோனி, நிவிற்றிகலை.
25. எஸ். ஏ. செல்வம், கரவெட்டி.
26. றெஜி விக்ரோறியா, கொழும்பு.
27. மேரி லூட்ஸ் மரியாம்பிள்ளை. கொழும்பு.
28. ஈ எல். மத்தியாஸ், அனுரதபுரம்.
29. ஏ. ஏ ஞானசோதி,
30. ரி. இராக்கினிதேவி, உடுவில்.
31. மேரிமாகிறேற். மாதகல்.
32. பி பிரான்சிஸ், தன்னுமுனை.
33. பி. லூர்துநாயகி, இளவாலை.
34. பத்மராஜா, பள்ளிமுனை.
35. எல் ஜி. செபஸ்தியாம்பிள்ளை, புத்தளம்.
36. எஸ். ஜே. ஆர். பீரிஸ், வங்காலை.
37. ஜே. எக்ஸ். பிரபாகரன், யாழ்ப்பாணம்.
38. மேரிமாகிறேற், யாழ்ப்பாணம்.
39. எம். ஜே. பிள்ளைநாயகம், ஊர்காவற்றுறை.
40. எம். லிகோரிஸ், மாம்புரி.

விடை: குருநாகல்.

❋ தற்போது வத்திக்கானின் எட்டு ஸ்தானிகர் ஸ்தானங்களும், நான்கு அப்போஸ்தலிக்க ஸ்தானுபதிகளின் ஸ்தானங்களும் காலியாயிருக்கின்றன என்பது ... ...

இவற்றிலே கிரேக்கநாடு ஒன்றுநீங்கலாக ஏனையபதினென்றும் கம்யூனிஸ்த ஆதிக்கத்தின்கீழுள்ள நாடுகளில்தான் காலியாயிருந்துவருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னமலரின் ...

(இளைஞர்பக்கத் தொடர்ச்சி)

வில் திருமணம்செய்துகொள்ள விழைந்ததில் ஆச்சரியமேதும் இருக்கவில்லை. 1858-ம்வருடம் ஆடித்திங்கள் 13-ம் நாள் மாட்டினின்வாழ்விலும், தாழ்விலும் ஷீலி இணைபிரியாதிருப்பதாகச் சத்தியதிருச்சபைக் குரவர்முன் சத்தியப்பிரமாணம்செய்து இல்வாழ்வைத் தொடங்கினுள்.

மாட்டினின் சிறியமாளிகை இத்தம்பதிகளை மகிழ்ச்சியுடன் வரவேற்றது. மேல்மாடியில் மாட்டினின் பெற்றோரும், கீழ்மாடியில் மாட்டின் தம்பதிகளும் வசித்தனர். ஷீலி தனதுசிறிய கைத்தொழிலைத் தன்சொந்தஇல்லத்துக்கு மாற்றிக்கொண்டாள். அவள் உறவினர்கள் பலர் அண்மையிலேயே வசித்தனர். அது அவளுக்கு நிரம்பிய மகிழ்ச்சியைக் கொடுத்தது.

(தொடரும்)

## தாம்ஓர் கிறீஸ்துவர்தாஞ ?

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பாஷணையின் ஞாபகம் மின்னலைப் போன்று தன்மனதில் வரவே, அவன் ஓடிச்சென்று அவளைக் கட்டித்தழுவி, இன்றுஉன்முறை; நாளைஎன்முறை; நாங்கள் வாயோரியாய்ச் சென்றஇரவு கூறியதுபோல் நீஇன்று சிங்கங்களுக்குஇரையாக எறியப்படவிருக்கிருய்; அவ்வாருயின் நாளையதினம நான் சிலுவையில் அறையப்படுவேனுக்கும்; தங்கைச்சி! தம்பியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நீ வழிநடந்து செல்; உனது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நாளையத்தினம் உன் அண்ணு உன்னைப்பின்தொடர்ந்து வரவிருக்கையில் நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்'' என்றுசொல்லி அவளைமுத்தமிட்டு வழியனுப்பினுன்.

(வளரும்)

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. M. B. 2069

தொண்டைமானுறு
முத்துராமலிங்கம் குமாரதேவா
— வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி
1. பொன்னையா திரையப்பாவும்
2. பெண் மரியம்மா லில்லி
திரையப்பாவும்

தற்பொழுது முதலாம் எதிரி கொழும்பில் சமத்தொழில், கைத்தொழிலுக்குக் கடன் வழங்கும் கந்தோரில் வேலைசெய்கிருர். இரண்டாம் எதிரி $6\frac{2}{1}$ மூர்ஸ் ருேட், வெள்ளவத்தையில் இருக்கிருர்.

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2069-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1960-ம்ஞு ஐப்பசிமீ 29-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 4820-ம், 20-2-58 தொடக்கம் 2-10-58 வரைக்கும், ரூபா 2780-க்குப் 10 வீதவட்டியும், அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 225-90சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி, சுண்டிக்குளிக் கோயிற்பற்று, சுண்டிக்குளிஇறை "பனிவேலன் சறை" $1\frac{1}{2}$ நிலப்பரப்பும், கல்வீடும் புதிதாய்க்கட்டிய கிணறும், மற்றுமதைச் சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு—S. S. மனுவேல்பிள்ளையின் ஆதனம். வடக்கு—அந்தோனிப்பிள்ளை சவிரிமுத்து பெண் அன்னப்பிள்ளையின் ஆதனம். மேற்கு—கோவில்வீதி. (Temple Road) தெற்கு—மத்தேசுப்பிள்ளை கிளிமன்றின் ஆதனம். இதில் சொரியலாய் ($\frac{1}{2}$) அரைவாசியும், பிரயோசனத்தில்பங்கு வீதமுள்ள பங்குகளும் ஆனுல், முழுக் காணியும் D $\frac{111}{56}$-ம் இலக்கப்படி பதியல் செய்யப்பட்டிருக்கிறது. அத்துடன், ஒரு பகுதியாகவும் D $\frac{85}{293}$-ம் இலக்கப்படியும் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

அ. ஜெகநாதன்,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 6, 2-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாண மாநகரசபை
### சோலைவரி மூன்றும்கந்தாயம்—1960

1960-ம்ஆண்டு மூன்றும்கந்தாயத்துக்கான சோலைவரிப்பணம் 1960-ம்ஆண்டு புரட்டாசிமாதம் 30-ம்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்குமுன்னர் மாநகரசபை அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும்.

குறிப்பிட்ட இக்காலஎல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் கூடுதலாகப் 10வீதம் வெலியாத்துப்பணம் அறவிடப்படும்.

காசோலைகள், மணியோடர்கள், போஸ்ரல்ஒடர்கள் முதலியன மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம் என்றமுகவரிக்கே அனுப்பப்படவேண்டும். இவ்விதம் பணம்அனுப்பப்படும்பொழுது வீட்டு இலக்கம், தெருப்பெயர், வட்டாரஇலக்கம்முதலிய விபரங்களும் தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும்.

கட்சன் செல்வராசா,
மாநகரசபை ஆணையாளருக்காக.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 14-9-60.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 431 Misc

சுன்னுகம்
சரவணமுத்து வைத்திலிங்கம்
பெண் செல்லமுத்து
— மனுதார்.

எதிராக
சுன்னுகம்
சரவணமுத்து வைத்திலிங்கம்
— பிரதிவாதி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 431 Misc-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1960-ம்ஞு ஐப்பசிமீ 22-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு, உடுவில் கோவிற்பற்று சுன்னுகம் இறை, "தட்டான் ஓடை" பர. நில. இலா. $7\frac{3}{4}$-ம். இக்காணியில் தெற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் அரைவாசியும். எல்லை: கிழக்கு — காசிப்பிள்ளை தம்பிஐயாவின் ஆதனம். வடக்கு—அப்புக்குட்டி தம்புவுக்கும், காசிப்பிள்ளை தம்பிஐயாவுக்கும் உரிய ஆதனம். மேற்கு — தண்ணீர் வாய்க்கால். தெற்கு—ஐயம்பிள்ளை கனகசபைக்குரிய ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசி.

அ. ஜெகநாதன்,
கோமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 6, 2-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதயராசாவின் இரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதாவின் மன்ருட்டாலும் நான்கேட்ட உதவிகிடைத்தது இன்னும் மீதியாயிருக்கும் கடன்நிவாரணமாகவும், எங்கள்கஷ்டங்கள்தீரவும், நான் நினைநதுஇருக்கும் காரியஙகள் அனுகூலமாகவும் சகாயமாதா தயைசெய்ய மன்ருடுகிறேன்.

கம்பளை மாதாவின் அடியாள்

## யாழ்ப்பாண மாநகரசபை

## கேள்விப்பத்திர அறிவித்தல்
## சந்தைக் குத்தகை — 1961

கீழ்வரும் சந்தைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் 3-10-60-ஆம்திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4-00மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப்பத்திரத்தில் தயாரிக்கப் பட்டனவாகவும், அரக்கு முத்திரை இடப்பட்டனவாகவும் இருக்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 3-10-60-ஆம்திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3மணிவரை வழங்கப்படும்.

| சந்தைகளின் பெயர்கள் | கேள்விப் பத்திரத்தின் விலை | கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்காகச் செலுத்தப்படவேண்டிய பொறுப்புப்பணம் | கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்குமுன் நொத்தாரிஸ் உறுதிக்காகச் செலுத்தவேண்டிய கட்டணம் |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1. பெரியகடை மரக்கறிச் சந்தை | 10-00 | 250-00 | 150-00 |
| 2. பெரியகடை மீன்சந்தை | 10-00 | 250-00 | 150-00 |
| 3. பெரியகடைக் காலை | 10-00 | 250-00 | 150-00 |
| 4. சின்னக்கடைச் சந்தை | 10-00 | 250-00 | 150-00 |
| 5. செங்குந்தர் சந்தை | 10-00 | 250-00 | 150-00 |
| 6. அரியாலைச்சந்தை பழையது | 2-50 | 50-00 | —— |
| 7. அரியாலைச் சந்தை புதியது | 2-50 | 50-00 | —— |
| 8. முத்திரைச்சந்தை | 2-50 | 50-00 | —— |
| 9. கொழும்புத்துறைச் சந்தை | 2-50 | 50-00 | —— |
| 10. நாவாந்துறைச் சந்தை | 2-50 | 50-00 | —— |
| 11. பாஷையூர்ச் சந்தை | 2-50 | 50-00 | —— |
| 12. பண்ணைமீன் சந்தை | 2-50 | 50-00 | —— |
| 13. பலாலிருேட் சந்தை | 2-50 | 50-00 | —— |
| 14. பெரியகடை மீன் சந்தைக் கருகாமையில் சயிக்கிள் பாதுகாத்துக் கொடுக்குமிடம் | 2-50 | 50-00 | —— |
| 15. பெரியகடை மீன்சந்தையில் சமான்கட்டும் கடதாசிகள் விற்குமிடம் | 2-50 | 50-00 | —— |

இதரவிபரங்களை, கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு எழுத்துமூலம் விண்ணப்பித்து அறியலாம்.

ஆ. வ. சின்னையா,
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை,

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
17-9-60.

## நன்றித் துதி

என் சகோதரர்களின் வேண்டுதல்கள் பரிசுத்த சகாயமாதாவின் திருவருளால் நிறைவேறின. நன்றியறிந்த வணக்கம்.

லூர்துசாமி
ஹற்றன்

* * *

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

முத்திப்பேறுபெற்ற மாட்டீன் டிபோரசிடம் யான் இரண்டாம்முறையாகக்கேட்ட நன்மை இற்றைக்கு 5மாதங்களின் முன்பு பெற்றுக்கொண்டேன். அவருக்கு எங்கள்குடும்பம் முழுவதினுடையவும் நன்றி உரித்தாகுக. நம்பிக்கைக்குப் பாத்திரமான இச்சுத்தவாளரிடம் இன்னும் இரு நன்மைகளைக் கேட்கிறேன். சுத்தவாளரே! நன்றிசெலுத்துவதில் எனதுஅசட்டைத்தனத்தை மன்னித்துக்கொண்டு நல்லதேவனைமன்ருடி, எனது இவ்விரு அவசியமும், காத்திரமுமான நன்மைகளைப் பெற்றுத்தருமாறு தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். எனது நன்றியை மீண்டும்பத்திரிகைவாயிலாக வெளிப்படுத்துவேன்.

எல். எம். குரூஸ்.

## கள்ளக்குடியேற்றகாரர்

இலங்கையிலே களவாகவந்து குடியேறமுயன்ற 38கள்ளக்குடியேற்றகாரரைச் சென்றசனிக்கிழமை இலங்கைக்கடற்படையினர் காங்கேசன் துறையிலிருந்து இரண்டுமைல் தூரத்துக்கப்பால் வள்ளத்துடன் கைதுசெய்திருக்கின்றனர்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதாவின் புதுமையாலும், அர்ச். சூசையப்பர், கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியார், அர்ச். தெரேசம்மாள், அர்ச். சவேரியார், அர்ச். ஆரோக்கியநாதர், அர்ச். செபஸ்தியார், அர்ச். ஞானப்பிரகாசியார், அர்ச். யூதாததேயு இவர்களின் மன்ருட்டினுலும் நமதுகுடும்பம் தாழ்மையுடன் இரந்து கேட்ட அரும்பெருஞ்சகாயங்கள் கிடைத்தன. என்றும் இவர்களுடைய பரிசுத்த நாமம் புகழப்படுவதாக. நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

செலஸ்தீனுப்பிள்ளை யோசவ்
மரியநாயகம் பாக்கியராஜன்.
சில்லாலை.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, [illegible] Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic [illegible] Premises, Main Street, Jaffna, on Thursday, Septemder 22-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org